விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | கார்த்திகை 13 | ஞாயிற்றுக்கிழமை | (28.11.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 345

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்
E-mail: thirumurugan@eudoramail.com

## சந்திரிகா அரசு எந்தத் தீர்வையும் முன்வைக்காது

# பொறுமையின் எல்லைக்கே புலிகள் சென்று விட்டனர்!

## மாவீரர்தின உரையில் தலைவர் பிரபா

(கிளிநொச்சி)

- பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்குமான எல்லைக் கோடுகளை விடுதலைப் புலிகள் அடைந்துவிட்டனர்.
- தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையில் நிபந்தனையற்ற முறையில் காலம் தாமதிக்காது சிறிலங்கா அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்.
- சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்காது காலத்தை இழுத்தடித்து எமது மக்களின் துயர வாழ்வை நீடித்துச் செல்ல சிங்கள அரசு முற்படுமானால் நாம் எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை.
- சந்திரிகாவின் அரசு தமிழ் மக்களுக்கு ஓர் இடைக்காலத் தீர்வையோ நிரந்தரமான தீர்வையோ வழங்கப்போவதில்லை.

**இவ்வாறு தெட்டத் தெளிவாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தனது மாவீரர்தின உரையில் தெரிவித்தார்.**

மாவீரர் வாரத்தின் இறுதி நாளான நேற்று எதிர்பார்ப்பும் வரலாற்றுச் சிறப்பு மிக்கதுமான உரையினை தலைவர் பிரபாகரன் தமிழீழ மக்களுக்கு ஆற்றினார். அவ் உரையின் முழு விபரம் வருமாறு;

இன்று ஒரு புனிதமான நாள். தமது உன்னதமான உயிருக்கும் மேலாக, தமது தேசத்தின் விடுதலையை அதியுன்னதமானதாக நேசித்து, அந்த உயரிய இலட்சியத்திற்காகச் சாவைத் தழுவிக்கொண்ட எமது மாவீரர்களை நாம் போற்றி வணங்கும் நன்னாள்.

எமது மாவீரர்களின் வீரஞ்செறிந்த போராட்ட வாழ்வையும் அவர்களது ஒப்பற்ற தியாகங்களையும் அற்புதமான அர்ப்பணிப்புகளையும் நெஞ்சில் நிறுத்தி நினைவுகூரும் இத் திருநாளில் ஒரு முக்கிய விடயத்தைக் கவனத்திற்கொள்ளுமாறு நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

(02 ஆம் பக்கம் பார்க்க)



## மாவீரர் நினைவாக நேற்று பாராளுமன்றில் ஈகச்சுடர்


(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களின் நினைவாக நேற்று மாலை இலங்கைப் பாராளுமன்றத்திலும் ஈகச் சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் 21 பேரும் பாராளுமன்ற முன் வாசலில் கூடி ஈகச் சுடர்களை ஏற்றி அக வணக்கம் செலுத்தினார்கள்.

இலங்கை பாராளுமன்ற அரசியல் வரலாற்றில் புலிகளின் மாவீரர் நினைவாக ஈகச்சுடர் ஏற்றி அகவணக்

(12 ஆம் பக்கம் பார்க்க)





படங்கள்: எமது அலுவலகச் செய்தியாளர்கள் ;
பவன், ஐங்கரன், சிவசங்கர்

## மாவீரர் துயிலும் இல்லங்களில் நெஞ்சை உருக்கும் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிரை ஈந்த 17 ஆயிரத்து 780 மாவீரர்களை நினைவுகூரும் வகையில் தமிழர் தாயகமெங்கும் மாவீரர் தினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழர் தாயகத்தில் உள்ள 24 மாவீரர் துயிலும் இல்லங்களிலும் நேற்று மாலை சம நேரத்தில் மாவீரர் தின இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.

குடாநாட்டில் உள்ள நான்கு மாவீரர் துயிலும் இல்லங்களிலும் நடைபெற்ற நிகழ்வுகளில் மாவீரர்களின் பெற்றோர்கள் பான்ட் வாத்திய இசையுடன் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தொடர்ந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)



# பொறுமையின் எல்லைக்கே.....

## படைவலுச் சமநிலையை நிலைநாட்டினோம்

மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்த எமது வீர விடுதலைப் போராட்டத்தில் எமது மாவீரர்கள் புரிந்த மகத்தான தியாகங்கள் காரணமாக ஒப்பற்ற போரியற் சாதனைகளை நாம் நிலைநாட்டினோம்.

உலகமே வியக்கும் வகையில் போர் அரங்குகளில் எதிரிப் படைகளை விரட்டியடித்து வெற்றிகளை ஈட்டினோம். சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருந்த எமது தாயக மண்ணின் பெரும்பகுதியை மீட்டெடுத்து அங்கெல்லாம் எமது நிர்வாக ஆட்சியதிகாரத்தை நிறுவினோம். உலக நாடுகளின் உதவியுடன் கட்டியெழுப்பப்பட்ட சிறிலங்கா அரசினது ஆயுதப் படைகளுக்கு ஈடாகப் படைவலுச் சமநிலையை நிலைநாட்டினோம்.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சர்வதேசமயப்படுத்தி, உலகத்தின் கவனத்தை எம் மீது திருப்பினோம்.

எனினும் எமது மாவீரர் கண்ட இலட்சியக் கனவு இன்னும் நிறைவுபெறவில்லை. எமது தாயக மண் இன்னும் முழுமையாக விடுதலை பெற வில்லை. எமது மக்கள் இன்னும் பூரண சுதந்திரம் அடைந்துவிடவில்லை.

தமிழீழத்தின் தொன்மைவாய்ந்த, வரலாற்றுப் புகழ்மிக்க நகரங்களும் பட்டினங்களும் அங்கு வாழ்ந்துவரும் எமது மக்களும் இன்னும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புப் பிடியிலிருந்து விடுபடவில்லை. அவர்கள் திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் அடைபட்டு, நசிபட்டு, மிதிபட்டு வாழ்கிறார்கள். தமது சொந்த மண்ணிலிருந்து வேர் அறுபட்டு இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கானோர், தாம் பிறந்து வாழ்ந்த நிலங்களுக்குத் திரும்ப முடியாது அகதி முகாம்களில் அல்லற்படுகிறார்கள். எமது மக்களின் துயரும் துன்பமும் தொடர்கிறது. தேச விடுதலை என்ற எமது இலட்சியம், எமது மாவீரர்கள் கனவுகண்ட அந்தச் சத்திய இலட்சியம் இன்னும் நிறைவுபெறவில்லை.

எனது அன்பான மக்களே,

தமிழழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு, ஒர் இக்கட்டான, சிக்கலான சூழ்நிலையை நாம் இன்று எதிர்கொண்டு நிற்கின்றோம். போருமின்றி, நிலையான சமாதானமுமின்றி, இயல்புநிலையுமின்றி, இடைக்காலத் தர்வுமின்றி, இனப்பிரச்சினைக்கு முடிவுமின்றி, நாம் ஒரு அரசியல் வெறுமைக்குள் வாழ்ந்து வருகின்றோம். இந்த அரசியற் சூனியநிலை நீடித்தால், அது எமது இலட்சியப் போராட்டத்திற்குப் பெரும் பங்கத்தை ஏற்படுத்திவிடும் என்பது திண்ணம்.

## சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க நாம் விரும்பவில்லை

மூன்று தசாப்தங்களாக முடிவின்றித் தொடர்ந்த ஆயுதப் போருக்கு நாம் ஓய்வுகொடுத்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. நாம் அமைதிகாத்த இக்கால விரிப்பில், சமாதான வழிமூலமாகத் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எம்மாலான சகல முயற்சிகளையும், நேர்மையுடனும் உறுதிப்பாட்டுடனும் நாம் மேற்கொண்டோம் என்பதை நீங்கள் அறிவர்கள்.

நோர்வே நாட்டை நடுநிலையாளராக ஏற்று, அந்நாட்டின் அனுசரணையுடன் உலக நாடுகள் சிலவற்றின் தலைநகர்களில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுக்களில் எமது விடுதலை இயக்கம் பங்குபற்றியது. ஆறு மாதங்கள் வரை நடித்த ஆறு சுற்றுப் பேச்சுக்களும் அர்த்தமற்றதாகப் பயனற்றுப்போயின. நெருக்கடி நிலையைத் தணித்து, இயல்பு நிலையைத் தோற்றுவித்து, இடம்பெயர்ந்த மக்களை மள்குடியமர்த்தவும் அவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கவும், போரினாற் பேரழிவுக்கு ஆளான கட்டுமானங்களைப் புனர்நிர்மாணம் செய்யவும் நிறுவப்பட்ட உப-குழுக்கள் செயலிழந்து செத்துப்போயின.

இவை ஒருபுறமிருக்க, சிறிலங்கா அரசானது எமது விடுதலை இயக்கத்தை ஓரங்கட்டிவிட்டு வாசிங்டனில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற் பங்குபற்றியது. இதனால், சமநிலைப் பங்காளி என்ற தகைமையிலிருந்து நாம் ஒதுக்கப்பட்டோம். இப்படியான புறநிலையிற்றான் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்த எமது இயக்கம் முடிவெடுத்தது. எமது அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தவே நாம் இந்த முடிவை எடுத்தோம். பேச்சுக்களை ஒரேயடியாக முறித்து, சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட நாம் விரும்பவில்லை. பேச்சுக்களை இடைநிறுத்தம் செய்த இடைவெளியில், ஒர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான திட்ட வரைவை முன்வைக்குமாறு ரணில் விக்கிரமசிங்காவின் அரசிடம் வேண்டுகோள் விடுத்தோம். நண்ட காலப் போரினாலே பாதிக்கப்பட்ட எமது மக்களுக்குப் புனர்வாழ்வு பெற்றுக் கொடுக்கவும் சிதைந்துபோன தமிழர் தேசத்தை மீள்நிர்மாணம் செய்யவும் கணிசமான அதிகாரத்துடன் ஒர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அவசியமென்பதை வலியுறுத்தினோம்.

## இடைக்காலசபைத் திட்டத்தை ரணில் நிராகரிக்கவில்லை

ஒன்றுக்குப்பின்ஒன்றாக ரணிலின் அரசு முன்வைத்த, இடைக்கால நிர்வாகம் பற்றிய மூன்று வரைவுகளும் எமக்குத் திருப்தியை அளிக்கவில்லை. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களுடன் நிர்வாக வலுவற்றதாக இத்திட்ட வரைவுகள் அமையப்பெற்றதால் எம்மால் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இறுதியில், ஒர் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவை நாமாகத் தயாரித்துக்கொடுக்க முடிவெடுத்தோம். பல மட்டங்களிலே தமிழழ மக்களின் கருத்தைப் பெற்று, வெளிநாடுகளிற் புலம்பெயர்ந்து வாழும் அரசியல் அறிஞர்கள், சட்ட வல்லுனர்கள், அரசியலமைப்பு நிபுணர்கள் ஆகியோரின் கலந்தாலோசனையுடன் ஒர் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தைத் தயாரித்தோம். இத்திட்டம் புதுமையானது. நடைமுறைச் சாத்தியமானது. எமது மக்களின் அவசரமான வாழ்நிலைத் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் இதன் கட்டமைப்பு நெறிப்படுத்தப்பட்டுள்ளது. தமிழர் தாயகத்தில் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி ஆகிய பணிகளைத் தாமதமின்றிச் செயற்திறனுடன் நிறைவுசெய்ய வழிவகுக்கும் உருப்படியான அதிகாரங்களைக் கொண்டதாக இத்திட்டம் அமையப்பெற்றது.

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தைச் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி நாம் ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கத்திடம் சமர்ப்பித்ததுடன், ஊடகங்கள் வாயிலாகப் பொதுசன அரங்கிலும் பகிரங்கப்படுத்தினோம்.

சர்வதேச நாடுகள் பல, எமது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை வரவேற்கத் தவறவில்லை. நீண்ட காலத்தின் பின்பு முதற்தடவையாக விடுதலைப் புலிகள் தமது அரசியற் சிந்தனைகளைத் தெளிவாகவும் விரிவாகவும் எழுத்தில் வடித்திருக்கின்றார்களென இந் நாடுகள் திருப்தி தெரிவித்தன.

நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் நிராகரிக்கவில்லை. தாம் சமர்ப்பித்த வரைவுகளைப் பார்க்கிலும் எமது திட்டம் வித்தியாசமானது என்று குறிப்பிட்ட அரசாங்கம், எமது யோசனைகளின் அடிப்படையிற் பேச்சுக்களை ஆரம்பிக்க இணங்கியது. ஆனால், அதே சமயம், எமது இடைக்கால நிர்வாகத் திட்டத்தைக் கடுமையாக விமர்சித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி, அது தமிழழத் தனியரசுக்கு இடப்பட்ட அத்திபாரமெனக் கண்டித்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கா ஒருபடி மேலே சென்று அதிரடி நடவடிக்கையை எடுத்தார். எமது இடைக்கால நிர்வாகத் திட்டம் அறிவிக்கப்பட்ட நான்காவது நாளே சந்திரிகா அம்மையார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கை தென்னிலங்கை அரசியலைப் பெரும் நெருக்கடிக்குள்ளே தள்ளியது. பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுகளை ஜனாதிபதி சந்திரிகா பறித்தெடுத்துக் கொண்டதால் ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சிபீடம் அதிகார வலுவிழந்து ஆட்டம் கண்டது. இதனைத் தொடர்ந்து மூன்று மாதத்திற்குள் ஜனாதிபதி சந்திரிகாவினாற் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் விளைவாக ரணில் அரசாங்கம் கவிழ்ந்தது.

## மூன்றாவது பிரதானகட்சியாக ஜே.வி.பி. உதயமானது

இவ்வாண்டு முற்பகுதியில் நிகழ்ந்த பொதுத் தேர்தல் சிங்கள, தமிழ்த் தேசங்கள் மத்தியிலான இன முரண்பாட்டினை மேலும் கூர்மையடையச் செய்தது. சமாதானத்திற்கும் இன இணக்கப்பாட்டிற்கும் விரோதமான சிங்களப்பௌத்த பேரினவாத சக்திகள், என்றுமில்லாதவாறு தென்னிலங்கை அரசியல் அரங்கில் மேலாண்மை வகிக்க இப் பொதுத் தேர்தல் வழிவகுத்தது. இனவாதமும் மதவாதமும் பழமைவாதக் கமயூனிசமும் ஒன்று கலந்த குளறுபடியான கருத்தியலில் ஊறித் திளைத்த, தமிழர் விரோதக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) இத் தேர்தலில் கணிசமான ஆசனங்களைப் பெற்று மூன்றாவது பிரதான அரசியற் கட்சியாக வெற்றி பெற்றது. இந்த இனவாதக்கட்சியை முக்கிய தோழமைப் பங்காளியாக அரவணைத்து, ஒரு கூட்டணி அரசாங்கத்தை அமைத்தார் சந்திரிகா அம்மையார். தமிழரின் தேசியப் பிரச்சினை குறித்து மாறுபட்ட போக்கும் முரண்பட்ட கொள்கையுமுடைய அரசியல் இயக்கங்களின் ஒவ்வாத கூட்டாக இந்த அரசாங்கம் அமையப் பெற்றது.



## தமிழ்த்தேசியம் எழுச்சிபெற்றது

பொதுசனத் தீர்ப்பின் வாயிலாக, தென்னிலங்கை அரசியலரங்கிற் சிங்களப்பௌத்த மேலாண்மைவாதம் வலுப்பெற்ற அதே சமயம், தமிழரின் தாயகமான வடகிழக்கில், ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட சக்தியாகத் தமிழ்த் தேசியம் எழுச்சிபெற்றது. எமது விடுதலை இயக்கத்தின் அரசியல் இலட்சியத்திற்கு மக்கள் சக்தியின் ஏகோபித்த ஆதரவு கிட்டியது. தமிழழ மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற வெகுசன அங்ககாரமும் எமது விடுதலை இயக்கத்திற்கு வழங்கப்பட்டது. எமது இயக்கம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்திற்கு எமது மக்களின் மனுவும் கிடைத்தது. விடுதலைப் புலிகளின் இலட்சியக் குரலாக, அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சனநாயக சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருபத்திரெண்டு ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியது. இப் பொதுத் தேர்தலானது என்றுமில்லாதவாறு தமிழ், சிங்கள இனங்களை வேறுபட்ட இரு தேசங்களாகப் பிளவுபடுத்தியது. கருத்தாலும் உணர்வாலும் இலட்சியத்தாலும் வேறுபட்டு, மாறுபட்டு, முரண்பட்டு நிற்கும் இரு மக்கள் சமூகங்களாகப் பிரிவுறச் செய்தது.

## ஜே.வி.பியின் கடும்போக்கு சந்திரிகாவுக்கு சவாலாகியுள்ளது

தென்னிலங்கையில் ஆட்சிமாற்றம் நிகழ்ந்து, அரசியலதிகாரம் இனவாத சக்திகளிடம் சென்றடைந்தபோதும் நாம் தொடர்ந்தும் அமைதிபேணி, சமாதான முயற்சியை முன்னெடுக்க விரும்பினோம். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையிற் பேச்சுக்களை ஆரம்பிக்க நாம் தயாரென்பதை நோர்வே அனுசரணையாளர்கள் மூலமாகச் சந்திரிகாவின் கூட்டணி அரசாங்கத்திற்கு அறிவித்தோம். அவ்வேளைதான் அரச கூட்டணிக்குள் குழப்பமும் கொள்கை முரண்பாடும் தலைதூக்கின.

அரச கூட்டணிக்குள் ஆதிக்க வலுவுடைய கட்சியான ஜே.வி.பி, சமாதானப் பேச்சுக்கள் வாயிலாகத் தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமையும் ஆட்சியதிகாரமும் வழங்கப்படுவதைக் கடுமையாக எதிர்த்தது. மூன்றாந்தரப்பு நடுநிலையாளராகச் செயற்பட்ட நோர்வே அரசையும் வன்மையாகக் கண்டித்தது. நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை முற்றுமுழுதாக நிராகரித்தது. எமது திட்டத்தின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பமானால் அரச கூட்டணியிலிருந்து வெளியேறிவிடப் போவதாகவும் மிரட்டியது. சமாதானப் பேச்சுக்கும் சமரச முயற்சிக்கும் எதிரான ஜே.வி.பியினரின் தீவிரவாதக் கடும்போக்கு, சந்திரிகா அம்மையாருக்குப் பெரும் சவாலாக அமைந்தது. இந்நிலையே தொடர்ந்தும் நீடிக்கிறது.

சமாதான வழிமுறையைப் பேணி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டுமென்ற சர்வதேச அழுத்தம் ஒருபுறமும், பேச்சுக்கள் ஆரம்பமாகி முன்னேற்றம் ஏற்படும் போதுதான் உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்த பெருந்தொகைக் கடனுதவி கிடைக்குமென்ற நிர்ப்பந்தம்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# பொறுமையின் எல்லைக்கே.....

மறுபுறமும், பாதாளம் நோக்கிச் சரிந்து செல்லும் இலங் கையின் பொருளாதாரம் இன்னொரு புறமுமாக, சந்திரி காவின் அரசு பலமுனைகளில் நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறது. இந்த நெருக்கடிக்கு முகம்கொடுப்பதாயின் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்பட் டிருக்கிறது. ஆனால் அரச கூட்டணிக்குள் நிலவும் உள்முரண்பாடும், அடிப்படையான கொள்கை வேறுபா டும், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குப் பெரும் இடையூறுகளாக எழுந்துள்ளன. தமிழரின் தேசிய இனப் பிரச்சினை குறித்து அரச கூட்டணிக்குள் அங்கம்வகிக் கும் கட்சிகள் மத்தியில் ஒரு தெளிவான கொள்கைத் திட்டமோ பொதுவான அணுகுமுறையோ இருக்க வில்லை. தமிழர் விரோத இனவாதத்திலும், போர்வெறி பிடித்த இராணுவவாதத்திலும், சிங்களப்பௌத்த மேலா திக்கத்திலும் ஊறித் திளைத்த தீவிரவாதச் சக்திகளு டன் அதிகாரக் கூட்டுறவு வைத்திருக்கும் சந்திரிகா அம்மையாரால் ஒரு தெளிவான கொள்கைத் திட்டத்தின் அடிப்படையிற் சமாதான முயற்சியை முன்னெடுக்க முடிய வில்லை. இதுதான் தென்னிலங்கையில் நிலவும் உண் மையான அரசியல் யதார்த்த நிலை. அரச கூட்டணிக் குள் கருத்தொற்றுமையில்லையென்ற அரசியல் உண்மை யானது மிகவும் சாதுரியமான முறையில், சர்வதேச சமூகத்திற்கு இருட்டடிப்புச் செய்யப்பட்டுவருகிறது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் நாம் நிகழ்த் திய பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாக, அதன் இறுதிக் கட்டத்திலேயே எமது இடைக்கால நிர்வாக யோசனை களை முன்வைத்தோம். அந்த யோசனைகளை அடிப் படையாக வைத்து உடன் பேச்சுக்களைத் தொடங்க லாம் என்ற எமது நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை ஆதரிக்கிறது. ஆனால் எமது நிலைப்பாட்டிற்கு மாறாக, சந்திரிகாவின் அரசு ஒரு நிபந்தனையை விதிக்கிறது. அதாவது, எந்த வகை யான இடைக்கால நிர்வாக அமைப்பும் ஒரு நிரந்தரமான தீர்வுத் திட்டத்தின் இணைபிரியாத அங்கமாக அமைய வேண்டும் என வலியுறுத்துகிறது. நாம் ஓர் இடைக்கால நிர்வாக ஒழுங்கை வேண்டிநிற்க, சந்திரிகாவின் அரசு இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுபற்றி பேச விரும்பு கிறது.

## இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அவசியம்

கால தாமதமின்றி, இடைக்கால நிர்வாகக் கட்ட மைப்பு தமிழர் தாயகத்தில் அமையப்பெறவேண்டுமென நாம் வலியுறுத்துவதற்கு முக்கியமான காரணங்கள் இருக்கின்றன.

நீண்ட காலமாகத் தொடர்ந்த கொடிய போரினாற் பாதிக்கப்பட்ட எமது மக்கள் மிகவும் அவசரமான வாழ் நிலைத் தேவைகளையும் பாரிய மனிதாபிமானப் பிரச்சி னைகளையும் எதிர்கொண்டு நிற்கின்றார்கள்.

பல்லாயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் அகதி முகாம் களில் அவல வாழ்க்கை வாழ்ந்துவருகிறார்கள். போரினாற் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் வழங்குவதற்கு உதவி வழங்கும் நாடுகள் பெருந்தொகையில் நிதி ஒதுக்கீடு செய்ய முன்வந்துள் ளன. துன்பப்படும் எமது மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் வழங்கவும், அழிவுற்ற தமிழர் தேசத்தை மீளக் கட்டியமைக்கவும் தகுந்த அதிகாரங்களுடன் வடகிழக்கில் ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு நிறுவப்படுதல் அவசியம்.

போர்நிறுத்தம்செய்து, மூன்று ஆண்டு காலமாக அமைதி பேணி, ஆறு மாதங்கள்வரை பேச்சுக்களை நடத்தியபோதும் சமாதானத்தின் பலாபலன்கள் இன்னும் எமது மக்களைச் சென்றடையவில்லை. தாங்கமுடியாத அளவிற்கு அன்றாட வாழ்க்கைப் பிரச் சினைகளின் சுமை எமது மக்களை நசுக்கிவருகிறது. முதலில், உடனடியாகத் தமது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டவேண்டுமென்பதையே எமது மக்கள் ஆவலாக எதிர்பார்த்து நிற்கின்றார்கள். எனவேதான், நாம் முன்வைத்த யோசனைகளின் அடிப் படையிற் பேச்சுக்களை ஆரம்பித்து வெகு சீக்கிரமாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவவேண்டு மென நாம் விரும்புகின்றோம். நாம் தெரிவித்த யோச னைகளிற் சில சர்ச்சைக்குரியனவாகத் தென்பட்டால் அவைபற்றிப் பேச்சுவார்த்தை மேசையில் விவாதித்துத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். முதலில், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவி, அது செம்மையாகச் செயற்படத் தொடங்குவதை அடுத்தே இனப்பிரச்சி னைக்கான நிரந்தரத் தீர்வுபற்றிய பேச்சுக்களை நடத்த லாம் என்பதே எனது நிலைப்பாடு. எமது கோரிக்கை நியாயமானது. தமிழர் தாயகத்தில் நிலவும் வாழ்நிலை நிதர்சனத்தைக் கருத்திற்கொண்டே நாம் இக் கோரிக் கையை முன்வைக்கின்றோம்.

## சந்திரிகாவின் அரசு எந்த தீர்வையும் தரப்போவதில்லை

ஆனால், சந்திரிகா அம்மையாரோ இனப்பிரச்சி னைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதுபற்றிப் பேச வருமாறு எமக்கு அழைப்பை விடுத்து வருகிறார். எந்த வடிவத் திலான இடைக்கால நிர்வாகத் திட்டமும், முழுமையான நிரந்தரத் தீர்வுத் திட்டத்தின் அங்கமாக அமைய வேண்டும் என்பது அவரது நிலைப்பாடு. தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு முன் னுரிமை வழங்கவேண்டும் என அவர் வலியுறுத்து வதற்குப் பல காரணங்களை நாம் சுட்டிக்காட்டலாம்.

முதலாவதாக, அரசுக் கூட்டணிக்குள் அங்கம் வகிக்கும் தீவிரவாத இனத்துவேசச் சக்திகளைத் திருப் திப்படுத்துவதற்காக இருக்கலாம். அதுவும் குறிப்பாக, நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை வன்மையாக எதிர்த்து நிற்கும் ஜே. வி. பியினரைச் சமாதானப்படுத்தும் நோக்கமாக இருக்கலாம்.

இரண்டாவதாக, தமிழரின் தேசிய இனப்பிரச்சினை யைத் தீர்ப்பதில் உண்மையான அக்கறைகொண்டவர் போன்று சர்வதேச சமூகத்திற்கு ஏமாற்று வித்தை காட்டுவதற்காக இருக்கலாம்.

மூன்றாவதாக, தமிழரின் சிக்கலான இனப்பிரச் சினை பற்றி விவாதிப்பது என்ற சாக்கில் பேச்சுக்களை முடிவின்றி இழுத்தடிப்பதற்காகவும் இருக்கலாம். இப்ப டிப் பல காரணங்களை நாம் சுட்டிக்காட்டலாம்.

எப்படியான காரணங்களாக இருந்தாலும் ஒன்றை மட்டும் நாம் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகின்றோம். அதாவது, சந்திரிகா அம்மையாரின் முரண்பட்ட, ஒன்றுக் கொன்று மாறுபட்ட நிலைப்பாடுகளைப் பார்க்கும் பொழுது, அவரது அரசானது தமிழ் மக்களுக்கு ஓர் இடைக்காலத் தீர்வையோ நிரந்தரமான தீர்வையோ வழங்கப்போவதில்லை என்பது புலனாகும்.

## சிங்களக்கட்சிகள் தமது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த வேண்டும்

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர மான தீர்வுவேண்டிக் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நாம் சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேச் சுக்களை நடத்திய கசப்பான வரலாறு பற்றி நான் இங்கு விபரிக்க விரும்பவில்லை. கடந்தகாற் சாகரம், ஈழத் தமிழ் இனத்தின் கூட்டு அனுபவத்திற் புதைந்து கிடக்கும் அரசியல் உண்மை இது. மொழியுரிமை என் றும் சம உரிமை என்றும் பிரதேச சுயாட்சி என்றும் சமஷ்டிக் கூட்டாட்சி என்றும் காலங்காலமாக நாம் பேச்சுக்களை நடத்தி, உடன்பாடுகள் ஒப்பந்தங்கள் செய்து, ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்பட்ட வரலாற்றுப் பாதையில் மீளநடைபோட எமது விடுதலை இயக்கம் தயாராக இல்லை.

சிங்களப்பௌத்தப் பேரினவாதச் சகதிக்குட் புதைந்து கிடக்கும் அரசியல் அமைப்புகளும் அவற்றின் தலைமைகளும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலா சைகளை ஒருபொழுதும் புரிந்துகொள்ளப்போவ தில்லை.

சிங்களத் தேசத்தின் பிரதான அரசியற் கட்சிகள் எவையுமே தமிழரின் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளைக்கூட அங்கீகரிக்கத் தயாராக இல்லை. வடகிழக்கு மாநிலமானது தமிழ்பேசும் மக்களின் வர லாற்றுத் தாயகம் என்பதையோ, தமிழர்கள் ஒரு தனித் துவமான தேசிய இனக் கட்டமைப்பைக்கொண்ட மக் கள் சமூகம் என்பதையோ தமிழீழ மக்களுக்குப் பிரிந்து செல்லும் உரிமையுடனான சுயநிர்ணய உரிமையுண்டு என்பதையோ எந்தவொரு சிங்கள அரசியல் இயக்கமும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படை களைப் புரிந்துகொண்டு அவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும் பெருந்தன்மையும் மதிநுட்பமும் இல்லாதது ஒருபுறமிருக்க, தென் னிலங்கை அரசியல் இயக்கங்கள் மத்தியில் ஒத்திசைவற்ற, ஒன்றுக்கொன்று மாறுபட்ட, முரண்பாடுகள் நிறைந்த கருத்துக்களையும் கொள்கைகளையுமே காணக்கூடியதாக இருக்கிறது.

இப்படிக் குளறுபடியான கொள்கைகளை வரித்துக் கொண்டு, அப்பட்டமான இனவாதம் பேசும் கட்சிகளின் கூட்டணிக்குத் தலைமைவகிக்கும் சந்திரிகா அம்மை யார், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது பற்றி அக்கறை காட்டுவது எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவிடமும் அவர், கூட்டாட்சி அமைத்திருக்கும் கட்சிகளிடமும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடமும் எமது விடுதலை இயக்கம் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகிறது. அதா வது, தமிழ் மக்களது இனப்பிரச்சினையின் அடிப் படைகள் குறித்து, அவர்களது மூலாதாரக் கோரிக் கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை குறித்து, உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப் பாட்டினை அதிகாரபூர்வமாகப் பகிரங்கப்படுத்துங்கள்.

## புலிகள் மீது வீண்பழி சுமத்துகிறார் சந்திரிகா

தென்னிலங்கை அரசியலரங்கில் தமிழரின் அடிப்படை அரசியல் அபிலாசைகள் குறித்துத் தெளிந்த பார்வையும், நேரிய தரிசனமும் ஒத்திசைவான நிலைப்பாடும் நிலவுமா னால் எமது மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமுண்டு. அல்லாதபட்சத்தில், நிரந்தரத் தீர்வு குறித்துப் பேசுவதில் அர்த்தமில்லை. தமிழர் பிரச்சினை குறித்துப் பிளவுபட்டு, முரண்பட்டுக் குழம்பி நிற்கும் சிங்கள அரசியல் தலைமைகளிடமிருந்து எமது மக்க ளுக்கு நியாயமான நிரந்தரத் தீர்வு கிடைக்கப்போவ தில்லையென்ற உண்மையை உணர்ந்துதான் நாம் இடைக்காலத் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்தோம். எமது மக்களின் வாழ்க்கைத் தேவைகளுக்காவது நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடனேயே நாம் இத் திட்டத்தை முன்வைத்து, பேச்சுகளை ஆரம் பிப்பதற்கு விருப்பம் தெரிவித்தோம். ஆனால் சந்திரி காவின் அரசு எமது நியாயமான நிலைப்பாட்டை நிராக ரித்து, நிரந்தரத் தீர்வு என்ற சாக்குச் சொல்லி, சமா தான முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டுவருகிறது. சமாதானத்தின் விரோதிகளையும் இனவாத சக்தி களையும் அவர்களது குளறுபடியான கொள்கைகளை யும் தனது கூட்டாட்சித் திரைக்குள் மூடிமறைத்து, விடுதலைப் புலிகள் மீது வீண்பழி சுமத்த முனைகிறார் சந்திரிகா அம்மையார். சமாதான முகமூடி அணிந்து நடிக்கும் சந்திரிகா அரசின் உண்மையான முகத்தைச் சர்வதேச சமூகம் அடையாளம் கண்டுகொள்ளும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

## தேச விடுதலையே எமது இலட்சியக் கனவு

இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிலையான அமைதியுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி, நாம் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்தும் சிறைபட்டுக் கிடக்கமுடியாது.

சிங்களத் தேசமானது தமிழினத்தை அரவணைத்து, இணைத்து வாழவும் விரும்பவில்லை. அதே சமயம், பிரிந்து சென்று தனித்து வாழவும் விடுவதாக இல்லை. இரண்டுங்கெட்டான் நிலையில் விடி வின்றி, விடுதலையின்றி, எதிர்காலச் சுபீட்சமின்றி சூனியமான அரசியல் இருட்டுக்குள் நாம் தொடர்ந்து வாழமுடி யாது.

பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் எல்லைக் கோடுகளுள்ளன. அந்த எல்லைக் கோடுகளை நாம் அடைந்துவிட்டோம். இந்த நெருக்கடியான சூழ்நிலை யிற் சிறிலங்கா அரசுக்கு நாம் அவசரமான அழைப்பு ஒன்றை விடுக்க விரும்புகின்றோம். அதாவது, நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையில், நிபந்தனையற்ற முறையில், காலந் தாமதிக்காது பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, காலத்தை இழுத்தடித்து, எமது மக்களின் துயர வாழ்வை நீடித்துச்செல்ல சிங்கள அரசு முற்படுமா னால், நாம் எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழி யில்லை. எமது இந்த இக்கட்டான நிலையை, தமிழரின் இனப்பிரச்சினையில் அக்கறையுடைய உலக நாடுகள் கருத்தில் எடுத்து, எமது நியாயமான நிலைப்பாட்டின் அடிப்படையிற் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி சிறிலங்கா அரசிற்கு அழுத்தம்கொடுக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

எமது மண்ணின் விடிவிற்காகவும் எமது மக்களின் விடுதலைக்காகவும் களமாடி வீழ்ந்த எமது மாவீரர் களை நினைவுகூரும் இப் புனித நாளில், தேச விடு தலை என்ற அவர்களது இலட்சியக்கனவை, எத்த கைய இடர்கள், சவால்களை எதிர்கொண்டபோதும் நிறைவுசெய்வோமென நாம் உறுதிபூணுவோமாக.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

### தேசியத் தலைவரின் 50 ஆவது அகவையை ஒட்டி நிதர்சனம் உருவாக்கிய

# தமிழீழப் போராட்ட வரலாற்றைச் சித்தரிக்கும் “தலைநிமிர்வு” எனும் விவரணச்சித்திரம் வெளியீடு

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் 50ஆவது அகவையை



யொட்டி, ‘‘தலைநிமிர்வு’’ என்னும் பெயரிலான, ‘தமிழீழ விடு தலைப் போராட்ட வரலாற்றைச் சித்தரிக்கும் விவரணச் சித்திரம் ஒன்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

நிதர்சனம் வெளியீடாக வெளிவந்துள்ள இந்த விவரணச் சித்திரம், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஐம்பதாண்டு வரலாற்றையும், தேசியத் தலைவர் பிரபாகரனின் 50 ஆண்டுகால வரலாற்றையும் ஒருசேர விபரிப்பதாக அமைந்துள்ளது.

இதில், தேசியத் தலைவர் பிரபாகரன் தொடர்பாகவும், தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும், பல்வேறு முக்கியஸ்தர்களும் தெரிவிக்கும் வாழ்த்துச், செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

தென்னிலங்கையைச் சேர்ந்த கலைஞர்களான, தர்ம சிறி பண்டாரநாயகா, அசோகா கந்தகம, பிரசன்ன விதானகே, றோகித பாஷண ஆகியோருடன், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெரியசாமி சந்திரசேகரன், மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் ஆகியோருடைய வாழ்த்துச் செய்திகளும் இந்த விவரணச் சித்திரத்தில் இடம் பெறுகின்றன.

இவர்களுடன், மாவீரர் கப்டன் மில்லரின் தாயார், மாவீரர்களான இரண்டாம் லெப்ரினன்ட் மாலதி, லெப்ரினன்ட் கேணல் விக்டர் ஆகியோரின் தந்தையர், யாழ் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், யாழ் பல்கலைக் கழக தமிழ்த் துறைப் பேராசி ரியை மனோன்மணி சண்முகதாஸ், தேசியத் தலைவரின் ஆசிரியர் களுள் ஒருவரான வேணு கோபால் ஆகியோருடைய வாழ்த்துச் செய்திகளும் இதில் இடம் பெறுகின்றன.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை.கோபால சாமி, பட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த இராமதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பைச் சேர்ந்த திருமாவளவன், நெடுமாறன், இயக்குனர் சீமான், கவிஞர் காசி ஆனந்தன், மறுவன் புலவூர் சச்சிதானந்தன், மணியரசன், தியாகு ஆகியோருடைய வாழ்த்துச் செய்திகளும், கருத்துக்களும் இந்த விவரணச் சித்திரத்தில் இடம்பெறுவதாகவும் நிதர்சனம் வெளியீட்டகத்தினர் விடுத்த செய்திக்குறிப் பொன்றில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ப-4)

## தேசியத் தலைவருக்கு கேடயம்

சங்கானை சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தினர் தமிழீழ தேசிய தலைவர் வே. பிரபாகரனின் 50 ஆவது பிறந்த தினத்தை நினைவு கூர்ந்து அவருக்கு சிறப்பு கேடயம் ஒன்றை வழங்கிக் கௌரவித்துள்ளனர். இதேவேளை இச்சங்கத்தின் ஏற்பாட்டில் மாவீரகளின் பெற்றோர் களைச் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்றும் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. (ப-39)

## பலசரக்குக் கடையில் தீ விபத்து பொருட்கள் எரிந்து நாசம்

தவறுதலாக இடம்பெற்ற தீ அனர்த்தத்தினால் பலசரக்குக் கடை ஒன்று எரிந்து நாசமாகியுள்ளது.

யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதியிலுள்ள கடை ஒன்றே இவ்வாறு தீயினால் எரிந்து நாசமாகி யுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற இவ் அனர்த்தம் பற்றித் தெரியவருவதாவது,



திருக்கார்த்திகை தினமான அன்றைய தினம் சிட்டி விளக்குகள் கடையினுள் கொளுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இவ் வேளை கடையினுள் வைத்து பெற்றோல் கொள்கலனில் இருந்து போத்தல் ஒன்றிற்குள் பெற்றோலை ஊற்றமுற்பட்ட சந்தர்ப் பத்தில் தவறுதலாக பெற்றோல் கீழே சிந்தியதால் பெற்றோல் கொள்கலனில் தீப்பிடித்தது.

இதனையடுத்து, பெற்றோல் கொள்கலன் உடனடியாகக் கடைக்கு வெளியே தூக்கி வீசப்பட்டது. இதனால் கடையில் இருந்த அநேகமான பொருட்கள் மற்றும் தளபாடங்களில் தீ பிடித்தது. பின்னர் கடைக்கு நீர் பாய்ச்சப்பட்டு தீ அணைக்கப்பட்டது.

இத் தீ அனர்த்தத்தினால் கடையிலிருந்த அநேகமான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன. (ந,க)

### வவுனியா ,மன்னாரில் இடம்பெற்ற அசம்பாவிதங்களில்

## படையினர் மக்களைத் தாக்கவில்லையென இராணுவப் பேச்சாளர் மறுப்புத் தெரிவிப்பு

(மன்னார்)

வவுனியா, மன்னார் பிரதேசங்களில் பொதுமக்களின் மீது படையினர் தாக்குதல் மேற்கொண்ட தாக்க கூறப்படும் குற்றச்சாட்டினை இராணுவப் பேச்சாளர் பிரி கேடியர் தயா ரத்னாயக்க மறுத்துள்ளார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் வகையில் எந்த வொரு சம்பவத்துடனும் பொலிஸாரோ, இராணுவத்தினரோ தொடர்பு படவில்லை.

எனினும் சில சந்தர்ப்பங்களில் குறைந்த பலத்தைப் பிரயோகிக்க வேண்டி ஏற்படும். பொதுமக்களை படையினர் ஒருபோதும் தாக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களில் தற்போது நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளதாக மக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

ஏதேனும் அசம்பாவிதங்கள் இடம்பெற்றால் அதனைச் சமாளிக்கும் வகையில் இராணுவத்தினரும், பொலிஸாரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.


விடுதலைப்புலிகள், இராணுவத்தினர், பொலிஸார் ஆகியோர் மிகவும் அமைதியான முறையில செயற்படுவார்கள் எனத் தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-4)

## நிதி ஒதுக்கீடு

யாழ்.மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சாவகச்சேரி நகரசபை, பிரதேச சபை என்பவற்றின் பராமரிப்பில் உள்ள கிராமிய விவசாயத்திற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதில் சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு 3 மில்லியன் ரூபாவும், சாவகச்சேரி நகர சபைக்கு 2 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ப-47)





கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலைக்கு அருகில் அமைக்கப்பட்டிருக்கும் பந்தலில் வைக்கப்பட்டுள்ள மாவீரர்களின் உருவப்படங்களுக்கு பெருமளவு மக்கள் அஞ்சலி செலுத்துவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலக நிருபர்)

## போரில் எம்மை வெல்ல முடியாதவர்கள் யுத்த நிறுத்த மீறலால் அழிக்க முயல்கின்றனர்

### இலக்கியன் குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

பல அர்ப்பணிப்புக்களோடு விதைக்கப்பட்ட 17ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்களின் கனவுகளை நாம் நனவாக்க வேண்டும் யுத்தக் களங்களில் எம்மை வெல்ல முடியாதவர்கள் சமாதான காலத்தில் யுத்த நிறுத்த மீறல்களை மேற் கொண்டு எமது போராளிகளின் உயிர்களைப் பறிக்கும் செயல்களில் ஈடுபட்டுள்ளனர் என கடற்புலிகளின் அரசியல் துறைப பொறுப்பாளர் இலக்கியன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

திருக்கோயில் மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் நடைபெற்ற மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் இலக்கியன் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்,

எமது உரிமையைப் பெற வேண்டுமானால் நாம் போராடித் தான் ஆக வேண்டும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் எமக்கு எதையும் வழங்கவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலாகிக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் வல்வெட்டித்துறையில் விளையாடிக் கொண்டிருந்த தமிழ் இளைஞர்களை சிங்களப் படைகள் சுட வேண்டுமா இது மிகவும் பாரியதொரு யுத்த நிறுத்த மீறலாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உடும்பன் குள கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலாகரன், அம் பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தாரகா, அம்பாறை மாவட்ட மாவீரர் காப்பகப் பொறுப்பாளர் பத்மன், வீரமுனைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆதிஸ்வரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதன், முன்னாள் நாடளுமன்ற உறுப்பினர் அ. சந்திரநேரு ஆகியோர் கலந்து கொண்டனர். (க-4)

## நட்புறவு-ஒத்துழைப்பு உடன்படிக்கையில் ஈரான் இலங்கை கைச்சாத்திட்டுள்ளன

(ஈரான்)

நட்புறவு மற்றும் ஒத்துழைப்புக்கான உனப்படிக்கை ஒன்றில் ஈரானும், இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா குமரதுங்கவின் ஈரானுக்கான இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தின் போதே இவ்வுடன் படிக்கை கைச் சாத்திடப்பட்டுள்ளது.

தெஹிரானில் வைத்து இரண்டு நாடு களின் ஜனதிபதிகளின் முன்னிலையில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும், ஈரான் வெளிவிவகார அமைச்சர் கமால் கராசியும் இந்த உடன்படிக்கையில் கடந்த வியாழக் கிழமை கைச்சாத்திட்டனர்.

இதன் மூலம், இரண்டு நாடுகளுக்கு மிடையில் அரசியல், பொருளாதார, வர்த்தக, கலாசார உறவு கள் விரிவு படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், இரண்டு நாடுகளிலும் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிலையங்களுக்கு மிடையே நேரடித் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கும் இந்த உடன்படிக்கை வழி வகுத்துள்ளது.

மேலும் இவ் உடன்படிக்கையின் அடிப்படையில் இரு நாடுகளினதும் பாராளுமன்றங்கள், கல்வி நிறுவனங்கள், சிவில் அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றிற்கிடையேயும் உறவுகள் பலப்படுத்தப்படவுள்ளன.

ஜனாதிபதி செலயலகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்விடயங்கள் குறித்து விரிவாகத் தெரிவிக்கப்பட் டுள்ளன.

இவற்றை விட பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பான புரிந்துணர்வு உடன் படிக்கைகளும் ஈரானுடன் செய்து கொள்ளப்பட்டுள்ளதாக அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-4)

# ஊடக அறிவியல் கல்லூரி கிளிநொச்சியில் நிர்மாணம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி முறிகண்டியிலுள்ள அறிவியல் நகரில் தமிழ் ஊடக அறிவியல் கல்லூரிக்கான அடிக்கல் நேற்று முன்தினம் நாட்டப்பட்டது. வண.பிதா மரியநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலரட்ணம் (கோபு) அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர் அடிக்கல் நாட்டினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன், பத்திரிகையாளர் டி.சிவராம், சட்டத்தரணி பூலோகசிங்கம், ஆசிரியர் திருநாவுக்கரசு ஆகியோர் நிகழ்வில் பங்கேற்று முக்கிய உரைகளை ஆற்றினர்.

இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள், கல்விமான்கள், பொது மக்கள் என பலர் கலந்துகொண்டனர். (ற-4)

# 50 அடி உயரத்தில் பொங்கல்

# கிளிநொச்சியில் சிறப்பாக நடைபெற்ற தேசியத் தலைவரின் பிறந்த தின நிகழ்வு

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் தலைவரின் ஐம்பதாவது அகவையை ஒட்டி நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அணியினதும் கரும்புலிகள் அணியினதும் விசேட கண்காட்சி அணி வகுப்பு நிகழ்ச்சியொன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.



நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியிலிருந்து ஆரம்பித்த இந்த அணிவகுப்பு நகர மத்தி வரையில் நீடித்திருந்தது. பாண்ட் வாத்தியக் குழுவினர் முன்னே அணி வகுத்துச் செல்ல, கடற்புலிகள் அணியினரும், கரும்புலிகள் அணியினரும் தொடர்ந்து அணிவகுத்து நகர வீதிவழியே சென்றனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் காலை தேசியத் தலைவருக்கு நல்லாசி வேண்டி கிளிநொச்சி நகரில் விசேட பொங்கல் நிகழ்வொன்றும் நடாத்தப்பட்டது. பொதுமக்களினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு, கிளிநொச்சி சேரன் வாணிப நிலையத்துக்கு முன்பாக வெகுசிறப்பாக இடம் பெற்றது. நிலத்தில் 49 பானைகளிலும், 50 அடி உயரத்தில் ஒரு பானையிலுமாக மொத்தம் 50 பானைகளில் இந்தப் பொங்கல் நிகம்வ இடம்பெற்றது.

இது தவிர வன்னிப் பகுதியில் பல்வேறு பகுதிகளிலும், இவ்வாறு விசேட பொங்கல் நிகழ்வுகள், தேசியத் தலைவருக்கு நல்லாசி வேண்டி நடாத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-4)


## பிரத்தியேக பாதுகாப்புச் சேவை-2005

## வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் சாலைகளிற்கான பாதுகாப்புக் கடமைக்காக பிரத்தியேக பாதுகாப்புச் சேவையினிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதன் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 01. யாழ். சாலை | காலை 0600-1800-05 பேர் |
| | மாலை 1800-0600-06 பேர் |
| 02. யாழ். பேருந்து நிலையம் | காலை 0600-1800-03 பேர் |
| | மாலை 1800-0600-02 பேர் |
| 03. பருத்தித்துறைச் சாலை | காலை 0600-1800-03 பேர் |
| | மாலை 1800-0600-03 பேர் |
| 04. காரைநகர்ச் சாலை | காலை் 0600-1800-03 பேர் |
| | மாலை 1800-0600-03 பேர் |
| 05. மன்னார்ச் சாலை | காலை 0600-1800-04 பேர் |
| | மாலை 1800-0600-04 பேர் |

ஒவ்வொரு சாலைகளிலும் பாதுகாப்புக் கடமைபுரிவதற்கு 01 நாளைக்கு 12 மணித்தியாலங்களுக்கு ஒருவருடைய வேதனத்தைக் குறிப்பிடவும்.

### விண்ணப்பிக்க விரும்புபவர்கள்:

01. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரத்தியேக பாதுகாப்புச் சேவை 2005" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் "பொது முகாமையாளர், வ.பி. போ. சபை, பலாலி வீதி, கோண்டாவில் " என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

02. சேவைகள் திருப்தியற்றதாகக் காணும் பட்சத்தில் ஒரு மாத கால முன்னறிவித்தலுடன் சேவை இடைநிறுத்தம் செய்யப்படும்.

03. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நகல் தகவல்களை விண்ணப்பப் படிவத்தோடு இணைத்தல் வேண்டும்.

1. பெயரும் விலாசமும்
2. தொலைபேசி இல
3. சேவைப் பதிவின் இலக்கமும் திகதியும்
4. சேவையின் தன்மை
5. பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக் கடிதம்
6. வங்கியின் பெயர்

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி:-2004.12.15

*குறிப்பு:-* கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும்.

க.கணேசபிள்ளை
பொது முகாமையாளர்,
வட பிராந்தியப் போக்குவரத்துச்சபை,
கோண்டாவில்.

(C/748)


# இராணுவத்தினர் நிதானம் இழக்காமல் பொறுமையுடன் செயற்பட வேண்டும்

## ஞானவேல் தெரிவிப்பு

(வவுனியா)

இராணுவத்தினர் நிதானம் இழக்காமல் பொறுமையுடன் நடந்துகொள்ள வேண்டியதன் அவசியம் பற்றி சந்திப்பில் தாங்கள் வலியுறுத்தியதாக விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வவுனியா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் க.கா.குழு பிரதிநிதிகள், இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் கொண்ட குழுவிற்கும் விடுதலைப் புலிகளுக்குமியில் இடம்பெற்ற சந்திப்பின் பின்பு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். மேஜர் தர இராணுவ அதிகாரியொருவர் போராளிகளை அவமதிக்கத் தக்க வகையில் நடந்து கொண்டார்.

இது தொடர்பாக அன்றைய சந்திப்பின் போது சுட்டிக்காட்டியபோது விசாரணை நடத்தி அவர் தவறிழைத்தமை உறுதிப்படுத்தப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத் தரப்பு உறுதியளித்தது.

தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்படுவது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைக்கு இந்தச் சந்திப்பில் இணக்கப்பாடு ஏற்படவில்லை.

தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்படாமல் எமது வைபவங்களை ஆரம்பிக்க முடியாது என்பதைத் தெளிவுபடுத்தினோம்.

இருப்பினும், அரசாங்கக் கட்டடங்களிலும் இராணுவ நிலைகளை அண்டியுள்ள பிரதேசங்களிலும் இதனை ஏற்றுவதைத் தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற வைபவத்தின் போது எடுத்துச் செல்லப்பட்ட ஒலி பெருக்கி உபகரணங்கள், தமிழீழ தேசியக் கொடி ஆகியவற்றை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஊடாகப் படையினர் மீள ஒப்படைக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அன்றைய சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் பற்றி அவர் மேலும் கருத்துரைக்கையில், இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்கு இருதரப்பினரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுத்தல், சிறப்பு நிகழ்வுகள் நடைபெறும் காலப்பகுதிகளில் தினமும் இத்தகைய சந்திப்புக்களை நடத்துதல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

இது போன்ற சந்திப்பொன்று நேற்று முன்தினம் மன்னார் மாவட்டதிலும் நடைபெற்று சுமுகமான தீர்மானம் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற-4)

# மாவீரர் நினைவாலயம் திறந்து வைப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட மாவீரர்களின் நினைவாலயம் நேற்று முன்தினம் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை அம்பாறை மாவட்ட இராணுவத் தளபதி ஜனார்த்தனன் ஏற்றி வைத்தார்.

மாவீரர் நினைவாலயத்தினை அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் திறந்து வைத்தார்.

பொதுச் சுடரினை அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தாரகாவும், ஈகச் சுடரினை தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதனும் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து மலர் மாலை அணிவிக்கப்பட்டது. இந்நினைவாலயத்தில் சுமார் மூவாயிரம் மாவீரர்களின் திருவுருவப் படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட பொருண்மியப் பொறுப்பாளர் சங்கரி, மாவீரர் காப்பகப் பொறுப்பாளர் பத்மன், அம்பாறை மாவட்ட கடற்புலிகளின் அரசியல்த்துறைப் பொறுப்பாளர் இலக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அ. சந்திரநேரு, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மாவீரர்களின் பெற்றோர்கள், போராளிகள், பொது மக்கள் என சுமார் 3ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.(க-4)

## பெருவிழா

மன்னார் பள்ளிமுனை புனித லூசியா ஆலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு திருநாட் திருப்பலியும், அதனைத் தொடர்ந்து திருச்சொருப பவனியும் இடம் பெறும். (ற)

# மன்மதன்
## திரை விமர்சனம்

தம்பியின் மரணத்துக்காகப் பழிவாங்கப் புறப்படும் அண்ணன் என்ற அரசுப் பழசான கதைக்கு நவீனச்சாயம் பூசி அதற்கு 'மன்மதன்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். மதன்குமார்-மதன் ராஜ் என்ற இரட்டைச் சகோதரர்கள். எனவே, இரண்டு வேடங்கள். ஒருவர் கல்லூரி மாணவராக சிந்துதுலானியைக் காதலிக்க, மற்றவர் எடிட்டர் அலுவலகத்தில் வேலை பார்க்கிறார்.

காதலி உட்பட இரட்டைக் கொலை செய்துவிட்டு, தானும் தற்கொலை செய்துகொள்கிறார் தம்பி. பிறகென்ன... தம்பியின் மரணத்துக்குக் காரணமான, பெண்ணினத்தை வேரறுக்கப் புறப்படுகிறார் அண்ணன். காதலுக்குத் தூரோகம் செய்யும் பெண்களாகத் தேர்ந்தெடுத்து வரிசையாகக் கொலைசெய்கிறார் மதன் குமார் என்கிற மன்மதன். தலையைப பிய்த்துக்கொள்கிறது பொலிஸ்.

மற்றொரு புறம், சிம்புவை நல்லவன் என்று நம்பி காதலிக்கிறார் ஜோதிகா. ஒருகட்டத்தில் உண்மை தெரியவர, ஜோதிகா புண்ணியத்தில், ஐநூறு பொலிஸார் சிம்புவைச் சுற்றி வளைத்துக் கைதுசெய்கின்றனர். பொலிஸ் கஸ்டடியில், கொலை செய்தது நானல்ல! தலைமறைவாக இருக்கும் என் தம்பி என்று பழங்கதை சொல்லித் தப்பிக்கிறார் சிம்பு.



இயக்கம் முருஹன். கதை, திரைக்கதை - சிலம்பரசன் என்பது திரையில் காட்டப்படும் எழுத்துக்கள் மூலம் தெரிகிறது. இவர்களையும் தாண்டி, வசனம் - பாலகுமாரன், ஒளிப்பதிவு - ஆர்.டி.ராஜசேகர், இசை - யுவன்சங்கர், கலை - ராஜீவன் எடிட்டிங் - ஆன்டனி ஆகியோரின் உழைப்பு பிரமாதமாகத் தெரிகிறது.

நாலே வரிக்கதை எனபதலால், இடைவேளைக்குப் பிறகுதான் படம் தொடங்குகிறது. முதற் பாதியை நகர்த்துவதற்காக நிறைய தொழில்நுட்ப பிரயத்தனங்கள் சலிப்பையே ஏற்படுத்துகின்றன. இருந்தபோதும், தனது சொந்தக் கதையைச் சிறபபாகச் சொல்லியிருப்பதற்காக சிம்புவைப் பாராட்டத்தான் வேண்டும்.

நேரம் கிடைக்கும் போதெல்லாம், தனுஷுக்குச் சவால் விடுவதையும், முன்னாள் நிஜக் காதலிக்கு சாபம் விடுவதையும் செய்திருப்பது எங்கே போய் முடியுமோ. இருந்தாலும் ரசிக்க முடிகிறது.... இரட்டை வேட சிம்பு, மாறுபட்ட முகபாவங்களில் ஜொலிக்கிறார். தமபி சிம்பு, காதல கொண்டேன் தனுஷைப் போல நடந்து கொள்வது உறுத்தல்தான்.

பின்னணி இசையிலும், 'காதல் வளாத்தேன்' பாடலிலும் யுவனுக்கு சபாஷ் போடலாம். அது போலவே பாலகுமாரனின் நறுக்குத் தெரித்த வசனம், ஆர்.டி.ராஜசேகரின் கமரா கலக்கியிருக்கிறது.

காமெடிக்காக கவுண்டமணி, சந்தானம். முன்னவர் வீணடிக்கப்பட, பின்னவர் பாஸ்மார்க் வாங்குகிறார். பொலிஸ் அதிகாரியாக அதுல் குல்கர்னி வந்துபோவது பெருத்த ஏமாற்றம்.

அதுல் குல்கர்னிக்கு ஃபோன் செய்தவரைக் கையும், களவுமாகப் பிடிக்க ஏகப்பட்ட வழிகள் இருக்க, கூட்டத்துக்குள் புகுந்து தேடுவது நம்பும்படியாக இல்லை.

மந்திராபேடி, யானாகுப்தா என்று டஜனுக்கும் மேறபட்ட அழகிகள என்று கதைக்கு அவசியமேயில்லாத ஏகப்பட்ட செலவுகள். மொத்தத்தில் பழைய மொந்தையில் புதிய கள் என்பதற்கு இந்தப் படம் மிகச் சிறந்த உதாரணம்.

**மன்மதன்~ பெண்மதன்.**

குஸ்தி

பிரபு-மான்யா



# டிசெம்பரில் 'ஜெய்சூர்யா'

கலெக்டர், ரவுடி ஆகிய இரு வேடங்களில் அாஜுன் நடிக்கும் படம் 'ஜெய்சூர்யா. இதை லக்ஷ்மிபிரியா கம்பைன்ஸ் - குரு பிலிம்ஸ் இணைந்து பிரமாண்டமாகத் தயாரித்துள்ளது.

லைலா, சாயாசிங், வடிவேலு, ராஜகா, கஸான்கான், கோட்டா சீனிவாசராவ், மகாநதி சங்கர், இளவரசு, சோப்ராஜ் பரவை முனியம்மா நடித்துள்ள இந்தப் படத்துக்கு ஏகாீத்திக்ராஜா ஒளிப்பதிவு செய்ய, தேவா இசையமைக்கிறார்.

மனோஜகுமார், செலவி மனோஜகுமார் இணைந்து தயாரிக்கின்றனர். சங்கர்தயாள் வசனம் எழுதுகிறார். கதை, திரைக்கதை எழுதி மனோஜ்குமார் இயக்குகிறார்.

இந்தப் படத்துக்காக அர்ஜுன், வடிவேலு முதன்முறையாக இணைந்து 'கட்டினா....' என்ற பாடலை சொந்தக் குரலில் பாடியுள்ளனர். டிசெம்பா மாதம ஜெய் சூர்யா படம் திரைக்கு வருகிறது.

# மனநல டாக்டர

சிவாஜி புரொடக்ஷன்ஸ் சார்பில் நடிகர் பிரபு பலகோடி ரூபாய் செலவில் தயாரிக்கும் பிரமாண்டமான படம் 'சந்திரமுகி' இதில் மனநல டாக்டர் சரவணன் [illegible] டரில் ரஜினி நடிக்க, அவரது ஜோடியாக 'ஐயா' படத்தில் சரத்குமார் ஜோடியாக நடிக்கும் மலையாள முன்னணி கதாநாயகி நயன்தாரா நடிக்கிறார்.

இன்னொரு கதாநாயகனாக பிரபு நடிக்க, அவரது ஜோடியாக ஜோதிகா நடிக்கிறார். மற்றும் வடிவேலு, நாசர், விஜயகுமார், மும்பை வினய் பிரசாத், சுவர்ணா, அவினாஷ் ஆகியோரு[...] வெளிக்குப் பிறகு செம்மீன் புகழ் ஷீலா பிரபுவி[...]

6பாடல்கள், 2சண்டைக் காட்சிகள் இட[...] வித்யாசாகர் இசையமைக்கிறார். வாலி, பா.விஜ[...] னர். சேகர், வி.ஜோசப் ஒளிப்பதிவு செய்ய, அ[...] றார். தோட்டா தரணி அரங்கம் அமைக்கிறார். சண்டைப் பயிற்சி அளிக்கிறார்.

ஏப்ரல் மாதம் தமிழ்ப் புத்தாண்டு தி[...] 'சந்திரமுகி' திரைக்கு வரும். படத்தின் கதை, [...] பி.வாசு இயக்குகிறார்.



# முதலமைச்சராக மல்லிகா

'மகாநடிகன்' படத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராக நடிக்கும் ஆட்டோகிராஃப் மல்லிகா, படத்தின் கிளைமாக்ஸில் முதலமைச்சராகப் பொறுப்பேற்கிறார். அவரை இந்தப் பதவியில் அமர்த்துபவர் ஏற்கனவே முதலமைச்சராகப் பதவி ஏற்றிருக்கும் சத்யராஜ். அவர் எதற்கு தனது பதவியை ராஜினாமா செய்கிறார்? என்ன இடைஞ்சல் ஏற்பட்டது என்பது இப்போதைக்கு இரகசியம்.

இதில் மல்லிகா ஜோடியாக மனோஜ் நடிக்கிறார். படத்தில் அவருக்கு சத்யராஜ் ரசிகர் மன்றத் தலைவர் வேடம் கிடைத்துள்ளது.



'அடைக்கலம்'
உமா

# விஜய் பேசும் த[...]

தனது தந்தை எஸ்.ஏ.சந்திரசே[...] விஜய் நடித்துவரும் படம் 'சுக்ரன்'. இதி[...] கதாபாத்திரத்தில் நடிக்கும் அவர் மிகப்[...] புரியவைக்கும் வகையில் ஒரு வசனம் பேசி நடித்துள்ளார்.




இதோ அந்த தத்துவ வசனம்...

'ஒரு ஓட்டப் பந்தயத்தில ஓடறேன். என்கூட ஒரு பத்துப்பேர் ஓடி வர்றாங்க. நான் மட்டுமே ஜெயிக்கணும் என்ற எண்ணத்தோடதான் ஓடணுமே தவிர, கூட வர்றவன் ஜெயிச்சிடுவானோ என்ற சின்னச் சந்தே[...] நான் தோத்துடுவேன். அதுக்கப்புறம் ஜெயி[...]லும் சரி, தோத்திட்டமேன்னு தலைகுனி[...] தாலும் வாழ்க்கை போச்சு. ஜெயிச்சிட்டபே[...] பார்த்தாலும் வாழ்க்கை போச்சு' எப்படி [...]

## பிஸி

நடிகை கோபிகா காட்டில் நல்[...] சொல்லவேண்டும். தமிழ், தெலுங்கு, மலை[...] தம் 7 படங்களில் நடித்து வருகிறார். [...] வாய்ப்புகள் அவரைத் தேடி வந்தன. தி[...] நோ சொல்லிவிட்டாராம்! ரொம்ப பி[...]

## ...டாக்டராக ரஜினி



...க்ஷன்ஸ் சார்பில்
...ப் செலவில் தயா
...டம் 'சந்திரமுகி'
...ணன் ...
... ஜோடியாக 'ஜயா'
...க நடிக்கும் மலை
... நயன்தாரா நடிக்
...
...ாக பிரபு நடிக்க,
...கா நடிக்கிறார்.
...ஜயகுமார், மும்பை வில்லன் சோனு, மாளவிகா,
...வினாஷ் ஆகியோருடன் முப்பது வருட இடை
...புகழ் ஷீலா பிரபுவின் அத்தையாக நடிக்கிறார்.
...க் காட்சிகள் இடம்பெறும் இந்தப் படத்துக்கு
...ார். வாலி, பா.விஜய் பாடல்கள் எழுதுகின்ற
...பதிவு செய்ய, அண்டனி எடிட்டிங் கவனிக்கி
...கம் அமைக்கிறார். தளபதி தினேஷ் அதிரடி
...கிறார்.
...ப் புத்தாண்டு தினத்தில் உலகம் முழுவதும்
... படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி

## மீண்டும் சுறுசுறுப்பு


திருமணத்திற்குப்பிறகு நடிக்கவே மாட்டேன் என்று முன்பு சத்தியம் செய்த சிம்ரன் இப்போது வரிசையாகப் படங்களை ஒத்துக்கொண்டு வருகிறார்.

'சந்திரமுகி', 'கிச்சா வயது 16' ஆகிய படங்களைத் தொடர்ந்து தெலுங்கில் ஒரு படத்திலும், மலையாளத்தில் ஒரு படத்திலும் நடிக்கவுள்ளார். மலையாளப்படத்தில் மம்முட்டிக்குச் ஜோடியாக நடிக்கிறார்.


## முகி படத்தில் நடிக்க மறுத்த சினேகம்

'முகி' படத்தில் சினேகா நடிகையை ஒப்பந்தம் செய்யத்தான் முடிவாச்சாம். ஆனால் தெலுங்கு, தமிழ் என இரண்டு வருடத்துக்கு கால்ஷீட் கொடுத்துவிட்டதாக அவர் பேட்டி தர கேரள நடிகையைப் பிடித்தார்களாம்.

சின்ன வேடங்களில் நடித்த அபி நடிகையைத் துசே படம் உச்சத்துக்கு ஏற்றியது. பிறகு அவர் இறங்குமுகமாகவே உள்ளார். உள்ளத்தைக் கடத்திய படத்தில் ஒத்துழைக்கவில்லை என்று சங்கத்தில் புகார் பதிவாகி உள்ளது. அடுத்து வந்த படவாய்ப்பும் கைகழுவி கண் நடிகைக்குப் போனது. எந்தப் படத்திலும் நடிக்கமுடியாத இக்கட்டில் தவிக்கிறார் அபி.



'அழகே'
உமா, ஜெய்ஆகாஷ்



'ஜெய்சூர்யா'
அர்ஜுன், சாயாசிங்

## சினிமாச் சிதறல்

## சூர்யா - ஜோதிகாவுக்கு வரும் மே மாதம் திருமணம்?



சூர்யா- ஜோதிகாவுக்கு வரும் மே மாதம் திருமணம் நடக்க இருப்பதாக திரையுலகில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

'பூவெல்லாம் கேட்டுப்பார்', 'காக்க காக்க', 'பேரழகன்' போன்ற படங்களில் வெற்றி ஜோடியாக வலம் வந்தவர்கள் சூர்யா- ஜோதிகா.

தற்போது டைரக்டர் பாலா தயாரிக்கும் 'மாயாவி' என்ற படத்தில் இருவரும் ஜோடியாக நடித்துவருகின்றனர். இவர்கள் இருவரும் காதலிப்பதாக திரையுலகில் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

அதன்படி சூர்யாவும், ஜோதிகாவும் திருமணம் செய்துகொள்ள இருவீட்டாரும் சம்மதித்துவிட்டதாகவும், அடுத்த ஆண்டு மே மாதம் இவர்களது திருமணம் நடக்கவுள்ளதாகவும் கூறப்படுகிறது.



ரஜினி மகள் ஐஸ்வர்யாவுக்கும், தனுஷுக்கும் திருமணம் நடந்த முடிந்த சில நாட்களில் இதுபோன்ற ஒரு தகவல் வெளியானதால் திரையுலகில் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து சூர்யாவின் தந்தையும், நடிகருமான சிவகுமார் வீட்டுக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டபோது, மறுமுனையில் சூர்யாவின் தாயார் பேசினார். சிவகுமாரிடம் பேச வேண்டும் என்று நிருபர் கேட்டபோது,


அவர் புத்தகம் எழுதி வருகிறார். அந்தப் புத்தகம் வருகிற ஜனவரி மாதம் வெளிவர உள்ளது. அதில் பிசியாக இருக்கிறார். என்ன விஷயம் என்று கூறுங்கள் என்றார்.

அவரிடம் சூர்யாவின் தங்கைக்கு விரைவில் திருமணம் நடக்க உள்ளதாகவும் அதைத்தொடர்ந்து வருகிற மே மாதம் சூர்யாவுக்கும்- ஜோதிகாவுக்கும் திருமணம் நடத்த முடிவு செய்திருப்பதாகவும் கூறப்படுகிறதே அது உண்மையா என்று கேட்டபோது,

நாங்களே இன்னும் எங்கள் மகளுக்கு மாப்பிள்ளை பார்த்து முடிவுசெய்யவில்லை. சூர்யா திருமணம் பற்றியும் முடிவுசெய்யவில்லை. அதற்குள் வேறு யார் யாரோ திருமணத் திகதி சொல்கிறார்கள். திருமணம் நிச்சயித்தால் அதை உங்களுக்குத் தெரிவிப்போம் என்று பதிலளித்தார்.

## ...சும் தத்துவம்

...எஸ்.ஏ.சந்திரசேகரன் இயக்கத்தில்
... 'சுக்ரன்'. இதில் ஒரு வித்தியாசமான
... அவர் மிகப் பெரிய தத்துவத்தைப்



ல ... வித்...
...சின்னச் சந்தேகம் வந்துட்டாகூட
...க்கப்புறம் ஜெயிச்சாலும் சரி, தோத்தா
...னு தலைகுனிஞ்சு தரையைப் பார்த்
... ஜெயிச்சிட்டமே என்று வானத்தைப்
...பாச்சு' எப்படி இருக்கிறது வசனம்?

## ...பிஸி

... காட்டில் நல்ல மழை என்றுதான்
...தெலுங்கு, மலையாளம்... என்று மொத்
... வருகிறார். இதுதவிர மேலும் சில
... வந்தன. திகதி கிடைக்காததால்
... ரொம்ப பிஸி!


## ஏக்கம் தீர்ந்தது

அடிக்கடி மனோரமா பேட்டிகளில் குறிப்பிடுவார், இதுவரை எத்தனையோ கரக்டர்கள்ல நடிச்சிருந்தாலும், இன்னும் அரவாணி கரக்டர்ல மட்டும் நடிக்கலயேன்னு ஏக்கமா இருக்கும் என்று. தற்போது அவரது ஏக்கம் தீர்ந்துவிட்டது. ஆமாம், 'அரவாணி' என்ற பெயரில் தயாராகும் ஒரு புதிய படத்தில், முதன்முறையாக அரவாணி வேடத்தில் நடிக்கிறார் மனோரம்மா.

இதில் நிஜமான அரவாணிகள் சிலர் நடிக்கிறார்கள். தங்கள் உரிமைகளை அவர்கள் வலியுறுத்துவதாகக் காட்சிகள் இடம்பெறுவதே இந்தப் படத்தின் விசேஷம்.

## சிம்ரன் நீக்கம்

'சந்திரமுகி' படத்தில் சில காட்சிகளில் சிம்ரன் நடிக்க மறுத்துவிட்டார். எனவே அவரைப் படத்திலிருந்து நீக்கிவிட்டனர். இப்போது சந்திரமுகியாக நடிப்பவர் ஜோதிகா.



'செவ்வேல்'
ராஜ்கிரண், சீதா

# துன்பப்படுபவர்களை மீட்பதற்காக இறைவன் காட்டிய வழி உடன்படிக்கை

உலக வரலாற்றுக் கண்ணோட்டத்திலே வலியவன் மெலியவனை அடிமைப்



படுத்துவதிலும், பின்னர் மெலியவன் தனது உரிமைகளை நிலைநாட்ட, வலியவருக்கு எதிரான உரிமைப் போராட்டம் நடத்துவதும், இறுதியில் ஒப்பந்தங்கள் மூலம் சமாதான நிலைப்பாட்டை அடைந்து வந்துள்ளதையும் நாம் அறிகின்றோம். பல வேளைகளிலே செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் மீறப்படுதலையும், ஒப்பந்தங்கள் செய்யப்படுவதையும் கிழிக்கப்பட்டு பழைய நிலைகள் தொடர்வதையும், துன்பங்கள் மாறி, மாறி வந்து மக்கள் விரக்தியின் விழிம்புக்குச் செல்லும் நிலைகளும் ஏற்பட்டுள்ளன.

**இஸ்ராலேயர் ஒப்பந்தம்**

அடிமைத்த எகிப்தில் நின்று சுதந்திரகானான் நாட்டை அடைய பாலைவனப் பயணங்கள் தொடர்ந்த போது, இறைவன் இஸ்ராலேயருடன் ஒப்பந்தம் செய்கின்றார். (உடன்படிக்கை)‘ நான் எகிப்திற்குச்

## பரமபிதா காட்டிய பாதை

செய்வதையும் கழுகுகளின் இறக்கைகளின் மேல் உங்களை ஏந்தி என்னிடம் வந்து சேரச் செய்ததையும், நீங்கள் கண்டீர்கள். நீங்கள் என்வார்த்தைக்குச் செவிசாய்த்து என் உடன்படிக்கையைக் கடைப் பிடித்தால், அனைத்துலகும் என் உடைமையெனினும் நீங்களே எல்லா மக்களினங்களிலும் என் தனிச் சொத்தாவீர்கள் .‘(விடுதலைப் பயணம் 19:4-6) ’என்று இறைவன் மேசே மூலமாக மக்களுக்கு அறிவுறுத்தினார்.

**ஒப்பந்தத்தின் வலிமை**

இஸ்ராயேல் மக்கள் இறைவனோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி பல வேளைகள் நடக்காமையால் கொடிய துன்பங்களை அனுபவித்தார்கள். உடன்படிக்கைக்கு பிரமாணிக்கமாக நடந்த வேளைகளில் எல்லாம் இறைவனுடைய ஆசீரை அபரிவிதமாகப் பெற்றுக் கொண்டார்கள். இறைவனுக்கும் மக்களுக்கும் இடையிலான நெருங்கிய உறவானது வலுப்பெற்று அவர்களின் விடுதலைப் பயணம் இலங்கை நோக்கி நகர்த்தப்பட்டது. மந்தபுத்தியும், அக்கிரமச் செயற்பாடுகளும் நிறைந்தவர்கள் மனம் மாறி இறை அன்புக்கு கட்டுப்படத் தொடங்கினார்கள்.

**இன்றைய வரலாறுகள்**

அண்மைக்கால வரலாறுகள் தொழில்நுட்ப விருத்தியின் செயற்பாடுகளாக, மாறி நவீன யுக்திகளின் அடிப்படையில் நடைபெறுகின்றன. உயிர்களின் மாண்பினை விட யுக்திகளின் திறமைகளை நிலைநாட்டுவனவாகவே காணப்படுகின்றன. செய்யப்படும் ஒவ்வொரு நன்மைத்தன நிழலின் பின்பும் ஒட்டுமொத்தமான தரக் கணிப்பீடே நடைபெறுகின்றது. தொண்டர் நிறுவனங்களாக இவை வெளிப்படுகின்றன. ஓர் இனத்தின் தனித்துவத்திலும் விட, தேசியத்தின் நிலைப்பாடுகள் தெளிவுபடுத்தப்பட முனைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. மனிதவிழுமியங்கள், நவீனத்துவத்தின் கால்களுக்குக் கீழ் மிதிக்கப்படுகின்றன. புதுமைத்துவம் என்ற போர்வையில் மரபுகள் மண்டியிட்டுக் கிடக்கின்றன.

**இயேசுவின் பதிவுள்ளம்**

இயேசுவின் காலத்திலும் ஏழை எளிய மக்கள் புறக் கணிக்கப்பட்டு, துன்புறுவதை இயேசு பார்த்துக் கொண்டு இருக்கவில்லை. சிற்றூர்கள் தோறும் சென்று நற்செய்தி கூறி, நோய் பிணிகளை எல்லாம் குணமாக்கி அன்புப்பணி செய்தார். அம்மக்கள் ‘ஆயரில்லா ஆடுகளைப் போல அலைக்களிக்கப்பட்டு சோர்ந்து காணப்பட்டார்கள்’ (மத்:9:36) அவர்க

**அன்ரனி பீற்றர்**

ளுக்கு பணி செய்ய அறுவடையின் ஆண்டவரை மன்றாடும்படி சீடர்களை அவர் வேண்டினார். பணி செய்ய முன்வரும் நல்ல உள்ளங்களை உற்சாகப் படுத்த வேண்டும். பணிகளுக்கு நாமும் ஒத்துழைப் புநல்க வேண்டும். இல்லையெனில எம் தலை விதிகளை நாமே சுமந்து தீர்க்க வேண்டும். துன்பங்கள் மத்தியில் சமூகத்துக்காக உழைக்க ஒவ்வொரு அன்பு உள்ளமும் முற்படும் போது எமது ஒற்றுமையின் பலம் விடுதலை வாழ்வைப் பெற்றுத்தரும்.□

## மானிய உதவி

(தனங்கிளப்பு)

அண்மையில் தென்மராட்சி, கைதடி சமுர்த்தி வங்கி ஊடாக அதன் எல்லைக்கு உட்பட்ட மக்களுக்கு மானிய விலையில் 70 தென்னம் நாற்றுகளும், உரமும் வழங்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி அதிகார சபையும், தென்னை அபிவிருத்தி சபையும் இணைந்து இத் தென்னை நாற்றுக்களை வழங்கியுள்ளன. (ப-37)

## புனரமைப்பு

(வியாபாரிமூலை)

வியாபாரிமூலை அருளம்பலம் சுவாமிகளின் சமாதி நினைவாலயம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து வருகை தந்த கட்டடவல்லுனர்களே இப் புனரமைப்புகளை மேற் கொண்டுள்ளனர். (ப-108)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 125 ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள இப் பரிசில் வழங்கும் நிகழ்வில் கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலய மாணவி துவாரகா சிவலிங்கம் தங்கப்பதக்கத்தைப் பரிசாகப் பெறவுள்ளார்.

இரண்டாம் இடத்தைப் பெற்ற கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய மாணவி யமுனா நாகராஜா வெண்கலப்பதக்கத்தையும், முன்றாம் இடத்தைப் பெற்ற மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி ரிதிகா யோகநாதன் வெண்கலப்பதக்கத்தையும் பெறவுள்ளார். (க)

**கசிப்பு உற்பத்தி செய்தமை தொடர்பான குற்றச்சாட்டு**

# உரும்பிராய் அன்னங்கையைச் சேர்ந்த மூன்று பெண்களுக்கு கடும் தண்டனைகள்

(கோண்டாவில்)

சட்டவிரோத கசிப்பு வைத்திருந்தமை, கசிப்பு செய்வதற்கான மூலப்பொருட்கள் வைத்திருந்தமை, கசிப்பு காச்சுவதற்கான உபகரணங்கள், பாத்திரங்கள், பரல்கள் வைத்திருந்ததற்காக அன்னங்கை உரும்பிராயைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு யாழ். மாவட்ட நீதிவான் இ.த. விக்னராஜா இரண்டு வருடசிறைத் தண்டனையும், 40 ஆயிரம் தண்டப்பணமும் செலுத்துமாறு தீர்ப்பளித்தார்.

தண்டப்பணம் செலுத்தவறும் பட்சத்தில் மேலும் எட்டுமாதங்கள் சிறையிருக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை சட்டவிரோத கசிப்பு வைத்திருந்தமை, அதற்கான மூலப் பொருட்கள் வைத்திருந்தமை, உற்பத்தி செய்வதற்கான பரல்கள், தளபாடங்கள் வைத்திருந்தமைக்காக அன்னங்கை உரும்பிராயைச் சேர்ந்த மற்றுமொரு பெண்ணிற்கு மாவட்ட நீதவான் இ.த.விக்னராஜாவால் இரண்டு வருட சிறைத்தண்டனையும், 40 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

தண்டபணங்களை செலுத்தத் தவறின் மேலும் எட்டுமாதங்கள் சிறை அனுபவிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் கசிப்பு தொடர்பான வழக்கு உரும்பிராய் கிழக்கில் மேலும் ஒருவருக்கு யாழ். மாட்ட நீதிமன்ற நீதவானால் 15 ஆயிரம் அபராதமும், 5 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ப-130,9)

# பயிற்சிப் பட்டறை

(கொழும்பு)

ஆங்கிலமொழி மூல விஞ்ஞான ஆசிரியர்களுக்கான (உயர் தரம்) இருநாள் பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 29 ஆம் 30 ஆம் திகதிகளில் கொழும்பு தேசியகல்வி நிறுவகத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு, களனி, ஸ்ரீஜயவர்த்தனபுர, மொறட்டுவ பல்கலைக் கழகங்களைச் சோந்த 16 வளவாளர்களும் தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த ஆங்கில மொழி மூல விஞ்ஞான பாடத்தில் நிபுணத்துவம் பெற்றவர்களும் இப்பயிற்சிப் பட்டறையை நடத்துவர்.

கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் எச்.டி குணவர்த்தன, தேசிய கல்வி நிறுவகத்தைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர் நாயகம் டாக்டர். திருமதி எல். ஜினிஹி, கொழும்பு பல்கலைக்கழக ஆளணி, அபிவிருத்தி நிலைய இயக்குநர் பேராசிரியர் எல். யூ. கே. எகிரட்ன ஆகியோரும் ஆசிரியர்களுக்கு ஆலோசனைகளை வழங்குவர். (க)

# மரணதண்டனையை அமுலாக்குவது குறித்து ஆராய விசேட குழு நியமிப்பு

(கொழும்பு)

மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு விசேடகுழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

இந்த விசேட குழு நாளை திங்கட்கிழமை நியமிக்கப்படவுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் புறூமி மர்சூத் தெரிவித்துள்ளார்.

மரணதண்டனையை நிறைவேற்றத் தேவைப்படும் கயிறு உட்பட ஏனைய உபகரணங்கள் தொடர்பாக இந்தக்குழு ஆராயவுள்ளது.

இக்குழுவில், சிறைச்சாலை ஆணையாளர் உட்பட நீதி அமைச்சின் செயலாளர், சிறைச்சாலையின் சிரேஷ்ட அதிகாரிகள் எனப் பலர் இடம்பெறவுள்ளனர். (க-61)

## சந்திப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் அண்மையில் பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கும் செயலக அதிகாரிகளுக் குமிடையான விசேட சந்திப்பொன்று இடம் பெற்றது.

இதில் பருத்தித்துறையில் அமுல் செய்யப்படவுள்ள சட்ட நடவடிக்கை பற்றி ஆராயப்பட்டுள்ளது. (ப-108)

# இலவச சீருடை, பாடநூல்கள் வழங்கும் உத்தியோகபூர்வ வைபவம் நாளை

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்களுக்கு உரிய அடுத்த ஆண்டுக்கான இலவசசீருடை, மற்றும் இலவசப் பாடநூல்களை வழங்கும் உத்தியோகபூர்வ வைபவம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள இந்த வைபவத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இலவச சீருடைகளையும் பாடப்புத்தகங்களையும் மாணவர்களுக்கு வழங்கவுள்ளார்.

வடக்கு- கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் 91 கல்வி வலயப் பிரிவுகளிலும் இருந்து தலா ஒரு மாணவர் வீதம் இந்த வைபவத்தில் கலந்து கொள்வதுடன் ஜனாதிபதியிடம் இருந்து நேரடியாக இலவச சீருடையினைப் பெறவுள்ளனர்.

இந்நிகழ்வில் மாணவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாடசாலை அதிபர்களும், சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தேசிய மட்டத்திலான இந்தப் பிரதான வைபவத்தைத் தொடர்ந்து அந்தந்த வலயங்களுக் குரிய இலவச சீருடைப் பொதிகளை சலுசல நிறுவனம் வழங்கவுள்ளது.

இதன்படி எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் இலவச சீருடைகளையும் பாடப்புத்தகங்களையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது. (க-61)

# ஜனவரி முதல் வாகனங்களில் கறுப்பு கண்ணாடிகளை பயன்படுத்த தடை

(கொழும்பு)

வாகனங்களின் கறுப்புக்கண்ணாடிகள் பாவனைக்கு அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இவ்வாறான வாகனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சு தெரிவிக்கின்றது.

இதேவேளை உடன் அமுலுக்கு வரும் வகையில் அனைத்து வாகனங்களையும் பரிசோதனையிட வேண்டும் என் பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் பிரிவினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பலதரப்பட்ட பாரிய குற்றச் செயல்கள், வாகனக் கொள்கைகள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் ஆகியவற்றைத் தடுப்பதற்காகவே இந்த புதிய திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படுகின்றது. (க-9)

# ஆறுமுக நாவலரின் குருபூஜை தினவிழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூஜை தினவிழா எதிர்வரும் டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 4 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் உள்ள நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவை யாழ். பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் ஏ. அனுஷாந்தனும் நிகழ்த்தவுள்ளனர். (க)

## இன்று ஒரு தகவல்

# கோபம்

அடிக்கடி கோபப்படாதே கோபப்படாதே என்று சொல்கிறாயே அது எப்படி முடியும்? என்று சொல்லி கோபப்படுபவர்கள் சிலர் உள்ளனர்.இது நியாயமான கோபம். ஒருவரையொருவர் நன்குபுரிந்து கொண்டால் கோபம்வராது என்று சொல்வது உண்டு.

ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்கு முன்னர் முதலில் இந்த கோபத்தைப் பற்றியே கொஞ்சம் புரிந்து கொள்ளவேண்டும். கோபம் வருவது இயற்கை. அதைப் பயன்படுத்தும் விதத்தைப்பொறுத்துத்தான் அது நல்லது செய்வதும் கெடுதல் செய்வதும்.

சரி அது இருக்கட்டும். இன்று அறிவியல் ரீதியாக அந்தக் கோபத்தைப்பற்றிக் கொஞ்சம் அலசுவோம். அதாவது அறிவியல் பார்வையில் கோபத்தைப் பற்றி ஒரு ஆராய்ச்சி. இயல்பூக்கம் என்று சொல்கிறோமே அதில் கோபமும் ஒன்று. ஒரு சிறந்த நோக்கத்துடன் கோபத்தை இயற்கை நம்மிடம் கொடுத்திருக்கிறது. அதை முதலில் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

விஞ்ஞானத்தைப் பொறுத்தவரை கோபம் என்பது ஒரு சக்தி.ஒரு தற்காப்பு சக்தியாக உபயோகப்படுவதற்காக உயிரினம் எல்லாவற்றிற்கும் இயற்கை கோபத்தைக் கொடுத்திருக்கிறது. முள்ளம் பன்றி சிலிர்க்கிறது, பாம்பு படம் எடுக்கிறது, தேள்கொடுக்கைத் தூக்குகிறது, புலி உறுமுகிறது, சிங்கம் கர்ஜிக்கிறது, கழுதை பின்னங்காலை உதறுகிறது இவை யாவும் கோபம்தான். எதற்காக இந்தக் கோபம். தற்காப்புக்காகத்தான்.

எறும்பு முதல் மனிதன் வரை எல்லா உயிரினமும் தனது பாணியில் கோபத்தைக் காட்டுகின்றன. கழுதை உதைக்காது, மாடு முட்டாது, தேள் கொட்டாது, புலி பாயாது என்றால் அவையாவும் இந்த உலகத்தில் இல்லாமல் அழிந்து போய்விடும். இயற்கையின் பாதுகாப்பு விதிப்படி அவை தன் முறைப்படி கோபத்தைக் காட்டித்தான் தீர வேண்டும். "இந்தத் தேள் இருக்கிறதே அது ஒருவரையும் கொட்டாது மிகவும் சாது' என்றால் அது ரப்பர் தேள் என்று அர்த்தம்.

மற்றைய உயிரினங்களுக்கும் மனிதனுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. இவனுக்கு ஆறாவது அறிவு உண்டு. அதுதான் பகுத்தறிவு. அதனால் இவன் தற்காப்புக்காக மட்டும் இல்லாமல் வேறு ஒரு காரணத்திற்காகவும் கோப உணர்ச்சியை பக்குவமாகப் பயன்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறான். அதை Righteous Indignation என்று சொல்லலாம்.

நியாயத்திற்காகக் கோபப்படுங்கள். நீதியை நிலை நாட்டுவதற்காகக் கோபப்படுங்கள். மகான்களுடைய கோபம் காந்தியடிகள் சத்தியாக்கிரகம், கடவுள் நெற்றிக் கண்ணைக் காட்டினார் என்று சொல்கிறோமே அவையாவும் இந்த வகையைச் சேர்ந்த கோபம்.

கோபம் ஒரு சக்தி ஊற்று என்று விஞ்ஞானம் சொல்கிறது. அதற்கு அடையாளம் என்ன தெரியுமா? நெஞ்சு படபடக்கிறது, உதடு துடிக்கிறது, பல் நற நற என்று கடிபடும், கண் சிவந்து ரத்தம் வேகமாக ஓடுகிறது, மூச்சுத் திணறுகிறது, மொத்தத்தில் உடல் முழுவதும் அந்தச் சக்தியின் வெளிப்பாட்டைத் தாங்கமுடியாமல் நடுங்கும்' சராசரி மனிதனுக்கு கோபம் வெளிப்படுத்தப்படும் விதம் இதுதான்.

மகான்கள் கோபசக்தியை இப்படி வெளிப்படுத்துவதில்லை. அது நெற்றிக் கண்ணாக வரும், சத்தியாக்கிரகமாக வரும், தண்ணீரை அணைகட்டி வெளிப்படுத்துவது போல் நிர்மாணசக்தியாக அது வெளியே வரும்.

நாமெல்லாம் என்ன செய்கிறோம். கோபத்தை வெறுப்புணர்ச்சியாக மாற்றி விடுகிறோம். அதன்பின் அவஸ்தைப்படுகிறோம். அதனால்தான் கோபத்தைப் பாவம் என்று பெரியவர்கள் கூறினார்கள். கோபமும் வெறுப்பும் சேர்ந்தால் பயம்.கோபமும் அன்பும் சேர்ந்தால் புண்ணியம். அநீதி மீது கோபம் வருகிறதா... அதோடு அன்பு என்ற உஷ்ணத்தைச் சேருங்கள் அதுதான் சத்தியாக்கிரகம். அந்த அற்புதத்தைச் செய்து காட்டியவர் காந்தி. அதனால் கோபத்தை வெறுக்காதீர்கள். அதைப் புரிந்து கொள்ளுங்கள்.

கோபமும் அன்பும் சேர்ந்தால் புண்ணியம் என்று சொன்னேனல்லவா? அதனால் தான் பல தம்பதிகள் புண்ணியம் செய்த தம்பதிகளாக உள்ளனர். கோபம் வேண்டாமென்றுதான் நினைக்கிறோம். அதற்காக நேரடியாகவே வந்து ஒருவர் உங்களிடம் உள்ள பணத்தை எடுத்துக் கொண்டுபோனால் அவரை மீண்டும் அழைத்து "இந்தாருங்கள் என்னிடம் உள்ள நகையையும் கொண்டுபோ" என்றா சொல்வீர்கள்?

ஒருவர் எதற்கெடுத்தாலும் கோப்படுவார். அவருக்கு மற்றவர்கள் 'சிடுமூஞ்சி' என்றே பெயர் வைத்துவிட்டார்கள். அவரைத் தேடிக்கொண்டு ஒருவர் வந்தார். "இந்த ஊரில் ஒரு சிடுமூஞ்சி இருக்கிறதாமே! யார்வந்து என்ன கேட்டாலும் எனக்குத் தெரியாது என்று கத்துமாம். அதை உங்களுக்குத் தெரியுமா?" என்று விசாரித்தார். இவர் கோபமாக "தெரியாது" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சிங்கள ஊடகங்களும் அரசாங்கமும் ஊடக பயங்கரவாதத்தைக் கைவிட வேண்டும்

## சு.ப.தமிழ்ச்செல்வன்



(கிளிநொச்சி)

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள ஊடகப் பயங்கரவாதத்தை சிங்கள ஊடகங்களும், அரசாங்கமும் கைவிடவேண்டும் என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி முறிகண்டியில் நிர்மாணிக்கப்படவுள்ள ஊடக அறிவியல் கல்லூரிக்கான அடிக்கல்லை நேற்று முன்தினம் சு.ப.தமிழ்ச்செல்வன் நாட்டினார்.

இந் நிகழ்வில் சிறப்புரையாற்றுகையிலேயே சு.ப.தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

சுதந்திரமாகவும், கௌரவமாகவும் மற்றையவர்களைப்போன்று வாழவேண்டும் என்பதே தமிழ் மக்களின் அபிலாஷை.

இதனைச் சிங்கள தேசமும், சிங்கள ஊடகங்களும் புரிந்துகொண்டு செயற்பட முன்வரவேண்டும்.

அவ்வாறு செயற்படுவதன் மூலம், தமிழ் மக்களும், தமிழ் பேசும் மக்களும் மட்டுமன்றி சிங்கள தேசமும், சிங்கள மக்களும் கூட நிம்மதியாக வாழமுடியும்.

அதற்கு எம்மால் எவ்வித பிரச்சினையும் ஏற்படுத்தப்படமாட்டாது எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், ஊடகவியலாளர் டி.சிவராம், அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு ஆகியோரும் சிறப்புரைகள் ஆற்றினர். ஊடகக் கல்லூரிக்கென தேசியத் தலைவரினால் வழங்கப்பட்டிருந்த விசேட நிதியினை, தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் நிகழ்ச்சி அமைப்பாளர்களிடம் கையளித்தார்.

இதேவேளை, அன்புச்சோலை மூதாளர் பேணலகத்துக்கான விசேட கட்டடத்துக்குரிய அடிக்கல் நாட்டல் நிகழ்வும் கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ற-4)

## நல்லுறவைப் பேணுவது குறித்து

# இராணுவம்- புலிகள்- க.கா.குழு வவுனியாவில் விரிவாக ஆராய்வு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் வன்முறைகளைத் தவிர்த்து இராணுவம்-புலிகள் மத்தியில் நல்லுறவுகளை மேம்படுத்துவது குறித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் டொன்பியூறு ஹொவ்டே தலைமையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.



வவுனியா வைரவப் புளியங்குளத்தில் உள்ள யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற விசேட கூட்டத்தின்போதே இவ்விடயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் அரசு தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தி வன்னிப் பிராந்தியத்துக்கான கட்டளைத் தளபதி ஜெனரல் பராமி குலதுங்க, பிரிகேடியர் ராஜபக்ஷ, வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகிந்த பெட்டேலய, பொலிஸ் அத்தியட்சகர்களான நெவில் குருகே, ரஞ்சித் கஸ்தூரிரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

விடுதலைப்புலிகளின் தரப்பில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல், வவுனியா அரசியல்துறை உறுப்பினர் தர்மேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் வவுனியா அலுவலகப் பிரதிநிதி பெஸ்சனார்மி உட்பட மற்றும் பல அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

வவுனியா மாவட்டத்தில் இயல்பு நிலையை ஏற்படுத்தும் பொருட்டுத் தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் இணங்கியுள்ளதாக அக் கூட்டத்தின் இறுதியில் கூட்டாக வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இனிமேல் வவுனியாவில் இடம்பெறும் முக்கியமான நிகழ்வுகளைத் தங்கு தடையின்றி நடாத்துவதற்கு இரு தரப்பினரும் நாளாந்தம் கூட்டங்களை நடத்துவதென்றும் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. (ற-4)

## இராசிபலன்

**28.11.2004**
(கார்த்திகை 13 ஞாயிற்றுக்கிழமை)
துதியை பின்னிரவு 5.07 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 4.35 மணிவரை
இராகுகாலம் 4.43- 6.13 மணிவரை
சுபநேரம் 9.13- 10.43 மணிவரை
விநாயக விரதம் 2ம் நாள்

**மேடம்** கூட்டுமுயற்சி, மனோ தைரியம், பிரயாண நன்மை, தெய்வசிந்தை

**இடபம்** மனோ சங்கடம், எடுத்த காரியம் தாமதமாகும், அதிக செலவு, விவாதம்.

**மிதுனம்** வெகுமானம் , சயன சுகம், நல்ல முயற்சி, நண்பர்கள் உதவி.

**கடகம்** சோம்பல் நிலை, பிரயாணம், மனக் கிலேசம், காரியதாமதம்.

**சிங்கம்** குடும்பமகிழ்ச்சி, தனதானிய சேர்க்கை, பெருமையடைதல், தொழில் சிந்தை.

**கன்னி** பிறருக்கு உதவி செய்தல், எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம், அதிகாரம்.

**துலாம்** எதிர்பாராத செலவு, சரீரப்பிரயாசை, நிர்ப்பந்த நிலை, வீண்பயம்.

**விருச்சிகம்** அஜீரணக்கோளாறு, உறவினர் வெறுப்பு, மனக்கவலை, முயற்சிதாமதம்.

**தனுசு** சென்ற இடத்தில் செல்வாக்கு, தேக நலம், போசனசுகம், களஸ்திரநன்மை.

**மகரம்** தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியம், சத்துரு ஜெயம், தனலாபம்.

**கும்பம்** அஜீரண ரோகம், காரிய இடையு'று, வியாபார சிந்தை, குடும்பக்கவலை.

**மீனம்** மனச்சஞ்சலம், தனவிரயம், முயற்சி தாமதம், அமைதிக்குறைவு.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

# மன்னார் கடற்பரப்பில் 12 இந்திய மீனவர் கைது

(மன்னார்)

மன்னார் பேசாலைக் கடலில் அத்துமீறி மீன் பிடித்துக் கொண்டிருந்த 12 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்று வள்ளங்களில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட இவர்கள், நேற்றுமுன் தினம் தலைமன்னார் பொலிஸார் ஊடாக மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்த மீனவர்களை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி, அதுவரை அவர்களது வள்ளங்களை கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (ற-4)

# வட - கிழக்கு வன்முறைகள் குறித்து பக்கச்சார்பின்றி விசாரணை நடத்தப்படும்

## அமைச்சர் ரத்னசிறி உறுதியளிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரதேசங்கள் சிலவற்றில் கடந்த சில தினங்களாக இடம்பெற்றுவரும் சம்பவங்கள் குறித்து பக்கசார் பற்ற விசாரணைகள் இடம் பெறுமென பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்ன சிறி விக்கிரம நாயக்க உறுதியளித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் ஆற்றிய உரை ஒன்றிற்குப் பதிலளிக்கும் வகையில் பேசிய போதே அமைச்சர் ரத்ன சிறிவிக்கிரம நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு- கிழக்குப் பிரதேசங்கள் சிலவற்றில் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பான தகவல்கள் இருதரப்பினரிடமிருந்தும் தமக்கு நேற்றுமுன்தினம் கிடைத்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர், விசாரணை முடியும் வரை அந்தத் தகவல்கள் இரகசியம் பேணப்படு என்றும் தெரிவித்தார்.

மாவீரர் தினத்தைமுன்னிட்டு கடந்த சில தினங்களாக யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற நிகழ்வுகளில் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியதால் பலர் படுகாயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமையைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்று பாராளுமன்றில் தெரிவித்திருந்தார்.

அத்துடன், மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்புவதை நோக்காகக் கொண்டு இடம்பெற்ற இச்சம்பவங்கள் குறித்து பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இரா. சம்பந்தன் கேட்டுக் கொண்டார். (க-61)

# மருதங்கேணி — செம்பியன்பற்று வீதி சேதமடைந்துள்ளதால் மக்கள் சிரமம்

(மருதங்கேணி)

மருதங்கேணி செம்பியன்பற்று வீதி புனரமைக்கப்படாததால் இவ் வீதியால் பயணம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ் வீதியை புனரமைப்பதற்கென கற்கள் பறிக்கப்பட்டு பல மாதங்களாகியும் இவ்வீதி இதுவரை புனரமைக்கப்படவில்லை.

அத்துடன் கடந்த பல நாட்களாக பெய்த மழையினால் இவ் வீதி அரிப்புக்குள்ளாகி காணப்படுகிறது.

இதனால் பாடசாலை செல்லும் மாணவர்களும், பொதுமக்களும், பல அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர்.

எனவே இவ் வீதியை உடனடியாக புனரமைக்குமாறு மாமுனை செம்பியன்பற்று மக்கள் கோரியுள்ளனர். (ப-35)

## நீதிபதி கொலை சந்தேக நபர்கள் புதிய உத்தியில் கைது

(கொழும்பு)

இலங்கையில் இதுவரை கையாளப்பட்ட புலனாய்வு முறைகளுக்கு அப்பால் சென்று நவீனத் தொழில்நுட்ப உத்திகளைக் கையாண்டதன் மூலமே மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலைச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். (த-04)

# சமாதானத்திற்கு ஹெல உறுமய பச்சைக்கொடி காட்டுகிறது!

வரவு-செலவுத் திட்ட யோசனைகள் உரிய முறையில் நிறைவேற்றப்பட வேண்டுமானால் சமாதான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது அவசியம் என ஜாதிக ஹெல உறுமய அரசிற்கு அறிவுறுத்தியுள்ளது.

அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் திருப்தியளிக் கக்கூடிய யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் அதனை உரியமுறையில் நிறைவேற்றுவதற்கு முன்னர் நாட்டில் அமைதியான சூழ்நிலையை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கட்சியின் தலைவர் எல்லாவெல மேதானந்ததேரர் தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்ட யோசனைகளை அரசு செயற்திறன் மிக்கதாக்க வேண்டும் என்றும் ... (கு)

# இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க உடன் நடவடிக்கை எடுக்குக!

## தமிழக முதல்வர் இந்தியப் பிரதமருக்குக் கடிதம்

(புதுடில்லி)

இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமென இந்தியப் பிரமதமர் மன்மோகன் சிங்கிடம் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு அவர் கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

இராமேஸ்வரம் கடற்பிராந்தியத்தில் மீன் பிடிக்கச் சென்ற 12 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் பிடித்துச் சென்றுவிட்டனர்.

இதுவரை 33 மீனவர்களும் 98 மீன்பிடிப்படகுகளும் இலங்கைக் கடற்படையினரின் வசம் இருக்கின்றன.

கச்சதீவுப்பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்வதை இலங்கைக் கடற்படையினர் தடுத்து நிறுத்தி வருகின்றனர்.

இலங்கைக் கடற்படையினரின் இவ் வாறான நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

இலங்கைக் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்கவும் அவர்களின் படகுகளை மீளப் பெறுவதற்கும் உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எனவே,இது விடயம் குறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அனுப்பி வைக் கப்பட்டுள்ள மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# "கடலோர அருளோசை" அடுத்த மாதம் வெளிவரும்

(பருத்தித்துறை)

"கடலோர அருளோசை "ஒலிப் பதிவு நாடா வெளியீட்டு விழா எதிர்வரும் 5 ஆம் திகதி பொலி கண்டி கந்தவனம் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


ஆசிரியர் பி. கிருஸ்ணஜோதி தலைமையில் இடம் பெறும் இந் நிகழ்வில் பிரம்மஸ்ரீ மகாகணபதி சிவானந்தராஜாக் குருக்கள் வரவேற்புரையும், பிரம்மஸ்ரீ வைத்திய நாதக் குருக்கள் ஆசியுரையையும் நிகழ்த்துவர்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மதிப்பீட்டுரையை நிகழ்த்துவார்.

வடமராட்சி கடற்புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.அன்பழகன்,சாவகச்சேரி மாவட்ட நீதிபதி சு.பா.சுப்பிரமணியம், பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், ஓய்வுபெற்ற நீதிபதி எம்.திருநாவுக்கரசு, வைத்தியகலாநிதி மயிலேறும் பெருமாள், யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம். நடராஜசுந்தரம்,யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இராசையா, சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, இலங்கை வங்கி' வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் எஸ்.பாலசுப்பிரமணியம் உட்பட இன்னும் பலர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர் . (ப-52)





தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் 50 வது பிறந்ததினத்தன்று யாழ். வணிகர்களினால் வட இலங்கை ஸ்ரீ பரமானந்த சிறுவர், முதியோர் இல்ல ஆச்சிரமத்தில் உள்ளவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்பட்டன. அன்பளிப்புப் பொருட்களை யாழ். வணிகர் கழகத் தலைவர் இ. ஜெயராசா சிறுவன் ஒருவருக்கு வழங்குகிறார்.அருகில் செயலாளர் இ. ஜனக்குமார், பொருளாளர் ச. சிவகுமார் ஆகியோர் நிற்பதையும் அன்பளிப்புப் பொருளான சைக்கிளை உபதலைவர் இ.ஜெயசேகர ஆச்சிரமச் செயலாளரிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

# செய்தித் துளிகள்

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 10.00 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் கே. சிறிமோகனன் தலை மையில் ஊர் காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ற)

## ஆன்மீகப் பேருரைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையும். ஆன்மீக விழிப்புணர்வு வட்டமும் இணைந்த அனுசரணையுடன் ரிஷி கேசத்து ஞானபீட சுவாமி யோகேஸ்வரானந்தா வழங்கும் ஆன்மீகப் பேருரைகள் டிசம்பர் மாதம் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"கர்ம யோகம்" தியான விழிப்புணர்வு ஆகியன குறித்த பி.ப 5 மணிமுதல் 6 மணிவரை நடைபெறவுள்ள இந்த ஆன்மீகப் பேருரைகள் ஆங்கிலத்தில் நிகழ்த்தப்படவுள்ளன. (க)

## சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு "வைஷ்ணவத்தின் தத்துவங்களும் பெரியாழ்வாரின் மகிமையும்" என்னும் பொருள் பற்றி கோண்டாவில் கசச்சிதானந்தன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ப-35)

## தங்கப்பதக்கம் அணிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வித்தியாகுரு மாணவர்களுக்கு தங்கப்பதக்கம் அணிவிக்கும் நிகழ்வு இன்று கொழும்பில் உள்ள அகில இலங்கை இந்துமா மன்றத்தில் பி.ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, இந்து சமய அலுவல்கள் அமைச்சு மற்றும் கல்வி வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சின் செயலாளர் கே.மகாநந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் எம்பியுமான தி.மகேஸ்வரன், மேல் மாகாண முன்னணி தலைவரும் எம்.பியுமான மனோகணேசன்,மலையக மக்கள் முன்னணியின் கொழும்புக் கிளைத் தலைவரும் எம்.பியுமான ராதாகிருஸ்ணன், இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ்சின் தேசிய அமைப்பாளர் ஆர். யோகராஜன் மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர்களான பிரபா கணேசன், சி.வை.ராம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

## உப அலுவலகம் திறப்பு

(மருதங்கேணி)

பருத்தித்துறை பிரதேச சபையின் வடமராட்சி கிழக்கிற்கான செம்பியன்பற்று உப அலுவலகம் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் சி. பசுபதி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க. இராசையா புதிய கட்டடத்தை திறந்து வைத்தார். (ப-35)

## பயிற்சி

(பொலிகண்டி)

டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பிரிவினர் யாழ். மாவட்டத்தில் கண்ணி வெடியகற்றுபவர்களுக்கான 3 ஆம் கட்டப் பயிற்சியினை வழங்கவுள்ளது.

இந்தப் பயிற்சியில் 47 பேர் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர்.(ப-106)

## தபால்பெட்டி இல்லை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புளியங்கூடல் சந்தியில் நீண்டகாலமாக தபால் பெட்டி இல்லாததால் பொது மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சின்னமடு, புளியங்கூடல்சரவணை மக்கள் சுமார் அரைமைல் தூரமுள்ள மகாமாரி அம்மன் ஆலயத்தடிக்குச் சென்று அங்குள்ள தபால்பெட்டியிலேயே தபால்களைப் போட்டு வருகின்றனர்.

இதனால் அவர்கள் மிகவும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். (ற)

## ஒலிபெருக்கி அன்பளிப்பு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் துயிலுமில்லத்திற்கு மருதங்கேணி கோட்ட ஆசிரியர்களும் கல்விசார் ஊழியர்களும் சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்களை தேசியத் தலைவர் பிறந்த தின விழாவையொட்டி அன்பளிப்புச் செய்துள்ளனர்.

உடுத்துறை மாவீரர் துயிலுமில்லத்தில் நடைபெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பில் வைத்து இது அன்பளிப்பு செய்யப்பட்டது. (ப-35)

ஆக்கமிழந்தோம் என்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத் துடையார் - குறள்

வலம்புரி

## தலைவர் பிரபாவின் உரையை ஜனாதிபதி செவிமடுப்பாரா?

சமாதானத்தின் ஆயுள் இன்னும் சொற்ப காலத்தில் முடிந்துவிடும்போல் தெரிகின்றது. யுத்தநிறுத்தம் ஒன்றுமட்டுமே இப்போது சமாதானத்தில் துடிப்பாகவுள்ளது. அந்த உயிர்த் துடிப்பும் நின்றுவிடுமோ என்ற ஏக்கத்தில் மக்கள் உள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான எந்த முயற்சிகளும் நடைபெறவில்லை.

விடுதலைப் புலிகளுடன் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசு செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையே இன்றுவரை சமாதான சூழ்நிலையை தக்கவைத்துள்ளது.

எனினும், அந்த அரசை தனக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தி கலைத்துவிட்டு தேர்தலை நடத்திய ஜனாதிபதி ஜே.வி.பி யுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு வலுவற்ற ஓர் அரசை அமைத்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு சமாதானத்தை ஏற்படுத்துவதில் காலம் கடத்துகிறது. தனது கட்சி ஆட்சிக்கு வந்தால் உடனடியாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பேன் என்று கூறிய ஜனாதிபதி, இன்று சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிப்பதில் எந்தவித நாட்டமும் இன்றி இருக்கின்றார்.

மாறாக சமாதான பேச்சில் தான் ஆர்வத்தோடு இருப்பதுபோலவும், எனினும் விடுதலைப் புலிகள் அதற்கு உடன்பட்டு வருகிறார்கள் இல்லை என்பதுபோலவும் உலக நாடுகளின் காதுகளில் ஓதி வருகின்றார். எனினும், இந்த இருவேட நிலை தொடர்ந்து நீடிக்கும் என அவர் நினைப்பாராயின் அது மிகப்பெரும் தவறாகும். இதனை விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் நேற்றைய தினம் ஆற்றிய மாவீரர்தின உரை உறுதிசெய்துள்ளது.

சமாதான்த்தை விரும்பும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையை செய்துகொண்ட விடுதலைப் புலிகளை சமாதானத்திற்கு விரோதமானவர்களாக காட்டுவதற்கு ஜனாதிபதி முற்படுவாராயின் அது இந்த நாட்டிற்கே பெரும் சாபக்கேடாகிவிடும்.

இதனையே தலைவர் பிரபாகரனின் உரை உணர்த்தி நிற்கின்றது. விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கு இணைந்து இடைக்கால சபைத் திட்டவரைபில் மிகவும் உறுதியாக இருக்கின்றனர் என்பதும் அவர்களின் பொறுமை எல்லை கடப்பதற்கு இன்னமும் அதிக காலம் எடுக்காது என்பதும் பிரபாகரனின் உரையில் இருந்து சிங்கள அரசு புரிந்துகொள்ளவேண்டிய முக்கிய விடயமாகும்.

விடுதலைப் புலிகளால் ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் கையளிக்கப்பட்ட இடைக்கால சபை திட்டவரைபில் இருந்து விலகி பிறிதோர் தீர்வுத் திட்டம் குறித்து பேச்சுக்கள் நடத்தலாம் என ஜனாதிபதி நினைப்பாராயின் அது எவ்வகையிலும் சாத்தியப்படாதென்பதை தலைவர் பிரபாகரனின் உரை ஜனாதிபதிக்கும் உலக நாடுகளுக்கும் தெளிவுபடுத்தியுள்ளது.

அதேவேளை தம்மால் முன்வைக்கப்பட்ட இடைக்கால திட்டவரைபை உள்ளவாறு முழுமையாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற விடயத்தை பிரபாகரன் வலியுறுத்தவில்லை. மாறாக அது விடயத்தில் ஏதேனும் தெளிவின்மை இருப்பின் அதுபற்றிப் பேச்சுவார்த்தை மேசையில் பேசித் தீர்த்துக்கொள்ள முடியும் என்பதும் அவருடைய விளக்கமாக உள்ளது. இதனைச் சிங்கள மக்கள் ஒரு கணம் நிதானமாக சிந்தித்துப் பார்ப்பது இந்த நாட்டில் மீண்டும் ஓர் யுத்தம் ஏற்படுவதை தடுப்பதற்கான வழியாக இருக்கும்.

அதாவது விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால சபைத் திட்டம் என்பது சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி அதன் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டதாகும். எனவே அந்தத் தீர்வுத் திட்டத்திலிருந்து பேச்சுக்களை ஆரம்பிப்பதே முறையானதாகும். இதனையே தலைவர் பிரபாகரனின் உரையும் வலியுறுத்துகின்றது.

இதனைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேச்சுக்களை ஆரம்பிப்பது மீண்டும் ஓர் போர் ஏற்படுவதை தடுப்பதற்கான ஒரே வழியாகும்.

# தமிழர்களுள் வல்லமைக்கான அடித்தளத்தினை உருவாக்கித் தந்தவர்கள் மாவீரர்களே

## தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா உரை

(துன்னாலை)

**பௌத்த சிங்கள பேரினவாதிகளால்தமிழ்மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த தடைகளை உடைத்து தமிழர்கள தன்மானம் உள்ளவர்கள் என்ற உண்மையை உணர்த்தும் வல்லமையை ஏற்படுத்தித் தந்தவர்கள் மாவீரர்களே.**

இவ்வாறு தூயவன் அரசறிவியல் கல்லூரியின் அதிபர் அரசண்ணா தெரிவித்துள்ளார்.

நெலலியடி மத்தியமகா வித்தியாலயத்தில் இடம் பெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நகழ்வில் தொடர்ந்து உரையாறறிய அரசண்ணா பேசுகையில்,மாவீரர்கள் தேசத்தை நேசித்தவர்கள். அவர்கள் சாகவில்லை.சரித்திரமாகிவிட்டார்கள். தற்போது சர்வதேசத்தில் எமக்கு மரியாதை பெறச்செய்தவர்கள் மாவீரர்களே.

17ஆயிரத்து 780 மாவீரர்களுடைய ஈகத்தால் எமது போராட்டம் உலகில் எழுச்சி பெற்றுள்ளது. இன்று எமக்கென ஒரு தாயகம் நிதித்துறை, இராணு வத்துறை, நீதித்துறை என்பன உண்டு. எமக்கென தேசியக் கொடியிருக்கிறது. இதனால் உலகம் தமிழர் என ஓர் இனத்தின் இருப்பை ஏற்றுக்கொண்டுள்ளது.

அத்துடன் எங்களிடமுள்ள உயிராயுதமான கரும்புலிப் படையின் வீரம் சிங்களப் படைகளைக் கதிகலங்கச் செய்கிறது.

குறைந்த மக்களின் பலமாக உருவாக்கப்பட்டவாகளே கரும்புலிகள். இற்றைவரை 263 கரும்புலிகளை உயிராயுதமாக்கியுள்ளோம். சாவுக்கு நாள் குறித்து வரும் பிள்ளைக்கு சோறூட்டிய அன்னையாகிய மில்லரின் அம்மாவுக்குக் கூட தன் பிள்ளை கரும்புலி மாவீரன் என்பதை அறியமாட்டார்.

தமிழ் மக்களின் பெறுமதியை அரசாங்கத்திற்கு உணர்த்தியது மாவீரர்களது தியாகமே. இவர்களை நினைவு கூரும் இந்நாள் தமிழர்களது எழுச்சிக்காலம் இது. தமிழ்மக்கள் தமது வல்லமையை உருவாக்கும் தளத்தை உருவாக்கியவர் மாவீரர்.

அரசாங்கத்திற்கு சமமானவராக சமாதானத்தைக் கடைப்பிடிப்பவராக இருக்கிறார்கள்.

இறந்தவர்களை சிறப்பிப்பவர்களே சிறந்தவர்கள். எனவே மாவீரர்கள் எம்மையெல்லாம் சிறந்தவர்களாக்கிவிட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவாகளது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. மாவீரர் பெற்றோர்களுக்கு கௌரவிப்பின் ஓர் அங்க மாக மாவீரா நினைவாக தென்னம் பிள்ளைகளும் வழங்கப்பட்டன. (ப-101)

## வடக்கு- கிழக்கு மாகாணத்தில் விசேட திட்டம்

# உலக வங்கியின் அனுசரணையுடன் 46000 வீடுகள் புனரமைக்கப்படும்

(வியாபாரிமூலை)

**வடக்கு-கழக்கு மாகாணப் போரினால் பாதிக்கப்பட்டு சேதமடைந்த நலையில் உள்ள 46 ஆயிரம் வீடுகள் உலகவங்கியின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.**

இவ்வாறான வீடுகளை புனரமைப்புச் செய்வோர்களில முற்றாக சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் பகுதிகளாகச சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்புச் செய்வோருக்கு 10 ஆயிரம் ரூபாவும் நிதி உதவியாக வழங்கப்படவுளளன.

இதனடிப்படையில் அடுத்த ஆண்டு தொடக்கம் யாழ். மாவட்டத்தில் 14 ஆயிரத்து 480 வீடுகளை புனரமைபபுச் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதல் முதற்கட்டமாக ஆயிரத்து 448 வீடுகளும் இரண்டாமகட்டமாக 3ஆயிரத்து 620 வீடுகளும் மூன்றாம் கட்டமாக 4ஆயிரத்து 706 வீடுகளும் நான்காம் கட்டமாக 4 ஆயிரத்து 706 வீடுகளும் மொத்தம் 4 கட்டங்களில இவ் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவ் வீட்டுப் புனர்நிர்மாணத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக குழு ஒன்று யாழ்.அரச செயலகத்தால் நியமிக்கப்படவுள்ளது.

இத் திட்ட அமுலாக்கலுக்கான கிராமங்களை தெரிவு செய்தல், பயனாளிகளை இனம்காணல் போன்ற நடவடிககைகள் தற்பொழுது இடம்பெற்றுவருகின்றன.

உலகவங்கியின் உதவியுடனான இத்திட்ட அமுலாக்கலுக்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதில் இடம்பெயர்வு, மீள்குடியமர்வு,பிறவீடமைப்பு, உதவிகளைப் பெறாமை என்பன விசேடமாகக் கவனத்தில் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை யாழ். அரச செயலக திட்டமிடல் பிரிவு முன்னெடுக்கும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் அறிவித்துள்ளார். (ப-108)

## மாபிள் பதிப்புத் தொடர்பான பயிற்சிப் பட்டறை

எதிர்வரும் டிசம்பர் மாதம் 2 ஆம், 3ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை யாழ்ப்பாண கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் மேசன்மார்களுக்கு விரிவுரையும், செயல்முறைப் பயிற்சியும் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

இதில் கலந்து கொள்ள விரும்பும் மேசன்மார்கள் தங்களினது பெயர்களை கடற்கரை வீதியில் உள்ள மாகாணக் கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றாா கள.

இப்பயிற்சியில் கலந்துகொள்பவர்களுக்கு உணவு வசதிகள் வழங்கப்படும். பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்னுரிமை அடிப்படையிலேயே அனுமதி வழ்ங்கப்படும்.

மேலும் பயிற்சியின் முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படுமென கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (க-7)

## தமிழ்த் தேசிய வரலாற்றில் மாவீரர்களின் தியாகம் ஒப்பற்றது

(மட்டக்களப்பு)

மாவீரர்களின் தியாகம் தேசிய வரலாற்றிலே ஒப்பற்ற தியாகமாகக் கருதப்படுகின்றது. தன்னலம் கருதாது தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்த உத்தமர்கள், தமிழீழத்திலே என்றுமே போற்றப்பட வேண்டியவர்கள்.

இவ்வாறு நேற்று முன்தினம் மட்டக்களப்பு முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய மட்டு.அம்பாறை மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.விமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் அங்கு கூறுகையில்,

எதிர்காலத்தில் எமது சமூகத்தை தேசப்பற்றுள்ள சமூகமாக உருவாக்கி முகாமைத்துவப்படுத்தும் சமூகமாக மாற்றுவது பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. தமிழீழத்திலே சுதந்திரமாக தற்போது நாம் செயலாற்றுவதற்கு மாவீரர்களே காரணம் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்கள் சுமாா 50 இற்கும் மேற்பட்டோர் கௌரவிக்கப்பட்டனர். (ற-4)

## மாவீரர் தின நிகழ்வு

(கற்கோவளம்)

பருத்தித்துறை பஸ்நிலைய மைதானத்தில் தேசிய எழுசசிப் பேரவையின் வடமராட்சிக் கோடடப்பொருளாளர் அ.ம.செபஸ்தியான் தலைமையில மாவீரர் தின நிகழவு நடைபெற்றது. இநநிகழ்வில் பொதுச் சுடரினை வடமராட்சி அரசியலதுறைப் பொறுபபாளா தயா ஏற்றி வைத்தாா.தேசியக் கொடியினை கடற்புலிகளின் தாக்குதல் தளபதி சலீம் ஏற்றிவைத்தார்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து ஈகைச்சுடரினை மாவீராகளின் பெற்றோரும் பொதுமக்களும் போராளிகளும் ஏற்றி வைத்து மலரஞ்சலி செலுத்தினர். பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் இதில் கலந்துகொண்டார்.

தொடர்ந்து கற்கோவளம், பொலிகண்டி, சுப்பர்மடம் இளைஞாகளினால கரகாட்டம், காவடியாட்டம் போனற நிகழ்வுகள நடத்தபபடடன. (சு-104,28)

## தினசரி தியானம்


### விவேகச் சிந்தனைகள்

**எதைத்தான் நீங்கள் செயல்முறை மதம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? கடவுள்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும். தூய இதயம் படைத்தவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் இறைவனைத் தரிசிப்பார்கள் . இதற்கு என்ன் பொருள்? தெருக்களைச் சுத்தம் செய்வதும் மருத்துவமனைகள் கட்டுவதுமா? நீங்கள் தூய மனதுடன் செய்தால் அவை நல்ல காரியங்கள் அவ்வளவுதான்.**

**சுவாமி விவேகானந்தர்**

## இந்து, கிறிஸ்தவ மத முறைப்படி

# பிரபாவின் பிறந்த நாளன்று அமெரிக்காவில் பிரார்த்தனை




(வோஷிங்டன்)

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 50 ஆவது அகவையை முன்னிட்டு அமெரிக்காவில் விசேட பிரார்த்தனைகள் நேற்றுமுன்தினம் இடம் பெற்றன.

அமெரிக்க உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இப் பிரார்த்தனைகள் இந்து, கிறிஸ்தவ மத முறைப்படி நியூயோர்க், சிக்காக்கோ, லொஸ் ஏஞ்சல்ஸ், சக்ரமென்ரோ, சான் பிரான்ஸ்சிக்கோ, புளோரிடா மற்றும் ஒஹாயோ ஆகிய மாநிலங்களில் இடம்பெற்றன. (த-04)

# ஊடுருவி தாக்கும் படையணியின் ஒரு தொகுதி சீருடைகள் மாயம்

## இராணுவ வட்டாரங்களில் அதிர்ச்சி

புலிகளின் பகுதிகளினுள் ஊடுருவி முக்கிய புலி உறுப்பினர்கள்மீது தாக்குதல் நடத்துவதற்கென அமைக்கப்பட்ட இராணுவத்தின் ஆழ ஊடுருவித்தாக்கும் படையணிக்கென விசேடமாகக் கொள்வனவு செய்யப்பட்ட சீருடைகளில் ஒரு தொகுதி காணாமல் போயுள்ளதாக முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. இந்த விவகாரம் இராணுவ உயர் மட்டங்களில் பேரிடியாக விழுந்துள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவினால் இராணுவத்தில் உருவாக்கப்பட்ட இந்த விசேட படையணிக்கென அமெரிக்காவிலிருந்து மிக இரகசியமாக இந்த விசேட சீருடைகள் கொள்முதல் செய்யப்பட்டன. இந்த சீருடைகள் தொடர்பாக கடந்த 2001 ஆம் ஆண்டு அதிரடிப்படையில் கட்டளை உத்தியோகஸ்தராக முன்னர் பதவி வகித்தவர் அனுப்பிய தகவலின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆரம்பகட்ட விசாரணைகளில் குறிப்பிட்ட நிலையத்தின் கட்டளை அதிகாரியை விசாரித்தபோது அவர் சீருடைகள் அதிரடிப்படையின் ஆர்.எவ்.ரி. முகாமுக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவித்தார். அதன் பிரகாரம் மூன்று வருடங்களாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவந்தது. ஆனால் அந்தச் சீருடைகள் காணாமல்போயுள்ளன என்று தற்போது தெரியவந்துள்ளது. இந்த சீருடைகள் புலிகளின் கைகளுக்குச் சென்றுவிட்டனவா என்பது குறித்து இராணுவ வட்டாரங்களில் சந்தேகம் எழுந்துள்ளது. இது குறித்து தற்போது விசாரணைகள் முழு அளவில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இராணுவ நீதிமன்றத்தின் விசாரணைகள் ஒருபுறமும், இராணுவத் தளபதியின் உத்தரவின்பேரில் இராணுவப் பொலிஸின் விசாரணைகள் மறுபுறமும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த சீருடைகளின் பெறுமதி சுமார் மூன்று லட்சம் ரூபாவுக்கு மேல் என்று இராணுவ உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த விவகாரம் தொடர்பாக இதுவரை ஆறு பேரிடம் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. (த-4)

# சம்பந்தனின் மகன்மீது கைக்குண்டு வீச்சு

(திருகோணமலை)

திருகோணமலை அளத்தோட்டப் பகுதியில் இருந்து நேற்று மாலை நடாத்தப்பட்ட கைக்குண்டு வீச்சுச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

அளத்தோட்டப் பகுதியிலிருந்து நகரிலுள்ள தங்கள் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோதே இவர்கள் இருவரும் கைக்குண்டு வீச்சுச் சம்பவத்திற்கு இலக்காகியுள்ளனர். இச் சம்பவத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைபின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் புதல்வன் செந்தூரன், அவருடன் கூடச்சென்ற முருகேசு கோபாலன் ஆகியோரே படுகாயமடைந்தவர் ஆவார். இவர்கள் இருவரையும் கொழும்பு பிரதம வைத்தியசாலைக்கு கொண்டுசெல்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-04)

## மாவீரர் நினைவாக...

கம் செலுத்தியது இதுவே முதற்தடவையாகும். இதனையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் மாவீரர்களின் நினைவாக சிறப்புரை ஆற்றினார்.

இதேவேளை களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளும் நேற்று மாலை சிறைச் சாலைக்குள் மாவீரர்கள் நினைவாக ஈகச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தினார்கள்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிப் போராளிகளும் சிறைச்சாலைக்குள் ஈகச்சுடர்களை ஏற்றி அகவணக்கம் செலுத்தினர். (இ-04)

## மாவீரர் துயிலும்...

தாயக நேரம் 5.40 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர்தின உரை ஒலிபரப்பப்பட்டது. தொடர்ந்து 6 மணிக்கு மணியொலி எழுப்பப்பட்டு அகவணக்கம் இடம்பெற்றது. அடுத்து ஈகச்சுடர் ஏற்றும் நிகழ்வு நடைபெற்றது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனும், வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும், சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் தீவக கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் கண்ணனும் கொடிகாமத்தில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பாவும் ஈகச்சுடர் ஏற்றினார்.

தொடர்ந்து மாவீரர்களின் கல்லறைகளுக்கு மாவீரர்களின் பெற்றோர் நினைவுச் சுடரினை ஏற்றினர். பின்னர் மாவீரர் துயிலும் இல்லப் பாடல் இசைக்கப்பட்டது. அந் நேரம் நிலவிய கனத்த மௌனமும் நெஞ்சைப் பிசைவதாக அமைந்திருந்தது. துயிலும் இல்லங்களுக்கு தமது உறவுகளைப் தரிசிக்க பெருமளவானோர் திரண்டிருந்தனர். (த-103-101-35-19-05)










# மாவீரர்தினக் காட்சிகள்









படங்கள்: எமது அலுவலகச் செய்தியாளர்கள்; பவன், ஐங்கரன், சிவசங்கர்

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.